நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 16 | ஏப்ரல்/மே 1992 | விலை 5/-






உள்ளே :

- முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவின் சத்தியக் கடுதாசி பக்கம் 06, 07 இல்.
- தமிழ் இயக்கங்கள் போல நாங்கள் கொல்வதில்லை
  - பலஸ்தீனத் தலைவர் சரிநிகருக்கு அளித்த சிறப்புப் பேட்டி. பக்கம் 09 இல்.


# புலிப்படைக்குத் தடை !

மிகுந்த இழுபறிகளுக்குப் பிற்பாடு இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ளது. தமிழக முதலமைச்சர்'டாக்டர்'செல்வி. ஜெயலலிதாவின் விடாப்பிடியான தூண்டுதலே புலிகளின் மீதான தடைக்குப் பிரதான காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்திய மத்திய அரசின் இந்தத் தடை விடுதலைப் புலிகளைத் தீவிரமாகப் பாதிக்கும் என்பது வெள்ளிடைமலை. எனினும், இந்தத் தடையுத்தரவைப் பயன்படுத்தித் தமிழகத்தில் தனக்கிருக்கக் கூடிய எல்லா எதிர்ப்புக்களையும் பயங்கரமான முறையில் ஒடுக்கி விடுவதே டாக்டர் செல்வி. ஜெ.யின் நோக்கம் என்பது அண்மைக்காலத் தமிழ்நாட்டு அரசியலை ஊன்றிக் கவனிப் போருக்கு புரியும். (தமிழ்நாட்டு பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்பது வேறு விஷயம்!) பக்கம் 11 இல்

## ஏன் தடை செய்யக் கூடாது? - சுரேஷ்



**கேள்வி: புலிகள் மீதான தடை குறித்து தங்களது அபிப்பிராயம் என்ன?**

பதில்: புலிகள் இந்தியாவின், அதனது சட்ட ஒழுங்குகளை மீறிச் செயற்பட்டுள்ளனர். அதன் உச்சக் கட்டமே ராஜீவ கொலை. எனவே அவர்களைத் தடை செய்யக்கூடாது என்பதற்கு எந்தக் காரணமுமில்லை.

**கேள்வி: இத் தடை தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்குப் பாதகமானதல்ல**

பக்கம் 11 இல்

## செய்ய வேண்டிய ஒரு விடயம் தான் - டக்ளஸ்



**கேள்வி: புலிகள் மீதான இந்தியாவின் தடை குறித்து தங்களது அபிப்பிராயம் என்ன?**

பதில்: செய்ய வேண்டிய ஒரு விடயம் தான். புலிகள் தமிழ் பேசும் மக்களது விமோசனததிற்கு எதிரானவர்கள் என்றே நாம் கருதுகிறோம். எனவே இந்தியாவினது புலிகள் மீதான இத்தடையை வரவேற்கிறோம். இதனைப் பின்பற்றி மற்றைய நாடுகளும் புலிகள் மீதான தடையை கொண்டுவர வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி: இத்தடை தமிழ்**

பக்கம் 12 இல்


## நெருக்குதலின் தொடர்ச்சியே தடை - புலிகள்



இந்தியாவினது புலிகள் மீதான தடை அதன் குறுகிய தேசிய நலனைக் கருத்தில் கொண்டதாகவும் குறுக்கு வழிகளில் அரசியல் இலாபத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டதாகவும் விளங்குகிறது என புலிகள் இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு

பக்கம் 13 இல்




# கொலை வழி முடிவு !

இலங்கை அரசியல் புலம் படுகொலைகளையும் பயங்கரங்களையும் மட்டுமல்ல அபத்தங்களையும் காலத்துக்குக் காலம் காட்டி வந்துள்ளது.

கடந்த பல வாரங்களாக 'இரண்டு எதிரெதிரான போக்குகள் சமாந்தரமாகப் போய்க்கொண்டிருந்த ஒரு அபத்த நிலையைக் (Absu dity) காண்கிறோம். ஒரு போக்கு, சமாதானம், பேச்சுவார்த்தை, யாழ்ப்பாணத்தை நோக்கிய 'திக் விஜயங்கள்' , ஆயர்கள், பௌத்தத்துறவிகள், சமாதானம் விரும்பிகள் என யாழ் சென்று விடுதலைப் புலிகளுடன் பேசித் திரும்பியவர்களின் பட்டியலும் நீள்கின்றது. மறுபோக்கு, நீடித்த யுத்தம், தொடர்ந்த கெரில்லாத் தாக்குதல், அரசியல் பலவீனத்தை மூடி மறைக்க நடத்தப்படுகிற படுகொலைகள்.

பிரதானமான அரசியல் சக்திகள் அனைத்தும் நிலைமை இப்படியே தொடர்வதைத் தான் அவாவுகின்றன என்று தெரிகிறது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முனபு தங்களுடைய யோசனைகளை முன்வைக்கிற முதுகெலும்பும் அரசியல் நேர்மையும் செயலுறுதியும் ஆளுங் கட்சியிடமுமில்லை. முக்கிய எதிர்க்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிடமுமில்லை. இக்கட்சிகளிரண்டும் ஆடுகின்ற "கண்ணா மூ்சி" ஆட்டம் ஈழத்திற்கான எல்லைக் கற்களை ஒவ்வொன்றாக விதைத்து வருகிறது என்பதை இந்தக் கட்சிகளின் தலைமைகள் உணர்ந்திருக்கிறார்களா தெரியாது. மறுபுறத்தில் கோண்டாவிலிலிருந்து கோட்டைக்கும் கோட்டையிலிருந்து ஜெனிவாவுக்கும் குதிக்கால் பிடரிபட ஓடித்திரியும் சமாதான மூர்த்திகள் பலருக்கும் விடுதலைப் புலிகள் தமது எண்ணம் குறித்த திட்டவட்டமான முடிவெதையும் தரவில்லை. (இதனை எதிர்பார்க்கக் கூடாது என நீங்கள் யாராவது சொனனால அதுவேறு விஷயம்!)

சர்வதேச அரங்கில் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி அவர்களைப் பேச்சுவார்த்தைகள் நோக்கித்தள்ளக் கூடும் என்று அரசியல் அறிந்தோர் சொல்கிறார்கள். ஆனால் புலிகளை அறிந்தோர் அதனை நம்ப மறுக்கின்றனர். இத்தகையதொரு பின்னணியில் தான் முஸ்லிம் கிராமங்கள் மீது மறுபடியும் ஒரு வெறித்தனமான தாக்குதலைப் புலிகள் நிகழ்த்தியுள்ளனர். இந்தத் தாக்குதல்களுக்குப் புலிகள் பொறுப்பல்ல என்றும் சமாதானம் கூடிவரும் இச் சூழலில் அனைத்தையும் குழப்ப வேறு குழுக்களே இதனைச் செய்திருக்க வேண்டும் என்றும் ஒரு சில அரசியல் வட்டாரங்களில் 'கிசுகிசு'க்கப் படுகிற போதும் தாக்குதல் நிகழ்ந்த இடங்களிலிருந்து வருகிற தகவல்கள் பழியைத் துலாம்பரமாகப் புலிகள் மீதே போடுகின்றன என்பதுடன் அழிஞ்சுப் பொத்தான பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குத் தாமே பொறுப்பு என புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிக்கை விடுத்துள்ளதாயும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளின் இரத்தம் படிந்த கைகளைப் பற்றி வெற்று வார்த்தைகளில் கண்டனம் செய்வது இன்று வாய்ப்பாடாகப் போயிற்று. அவரவரும் தமது பக்கதது அநியாயங்களை மறைத்து விட்டு அறிக்கைகளுக்குள் தம்மைப் புதைத்துக் கொள்கிறார்கள்.

நடைமுறையில் எல்லாத்தரப்பு அப்பாவிகளும் தான் ஆயிரக் கணக்கில் பலியாகின்றார்கள்.

மாறிமாறிப் படுகொலை செய்வது என்ற நச்சு வட்டத்தை எப்படி நிறுத்துவது என்பது ஒரு அடிப்படையான கேள்வி. இந்தக் கேள்வி இனத்துவப் பிரச்சினையின் அடிப்படைத்தீர்வில் மையங்கொண்டுள்ளது. படுகொலைகளுடன் தொடர்புற்றுள்ள அனைவரும் அவர்கள் தமிழரோ, முஸ்லிமோ, சிங்களவரோ ஒரு விஷயத்தை உணர வேண்டும். பழிக்குப் பழி அரசியல் பிரச்சினையைத் தீர்க்காது; வளர்க்கும் என்பதே அது.

புகழ்பெற்ற எழுத்தாளர் ஆர்தர் கேஸ்லரின் நண்பகலில் இருள் என்ற நாவலின் நாயகன் றுபாஷோவ் தன்னுடைய வாழ்வின் அந்திம நாளில் பின்வருமாறு கூறுகிறான்:

"வரலாறு இளைப்பாறும் வேளையில், அரசியல் ஒப்பீட்டளவில் நிதானமாக இருக்கும்; ஆனால், அதனுடைய சிக்கலான திருப்பு முனைகளில் ஒரு பழைய விதியைத் தவிர வேறு எதுவுமே சாத்தியமில்லை. அந்த விதிதான் முடிவே வழிமுறைகளை நியாயப்படுத்தும் என்பது!"

காலங்காலமாக எல்லாக் கொடுங்கோலர்களும் மனித விழுமியங்களை மதிக்காத புரட்சியாளரும் கோட்பாடுகளை விழுங்கிவிட்டுச் செமித்துக் கொள்ள முடியாத அரசியலாளரும் தமது அநியாயங்களை நியாயப்படுத்த மேற்சொன்ன விதியைத்தான் எடுத்தோதினார்கள்.

ஆனால் மிகவும், மிகவும், மிகவும் முக்கியமான விஷயம் வழிமுறைகள் முடிவையே மாற்றிவிடும் என்பது தான்!

புரிந்து கொள்வோமா?

# மெல்லத் தமிழினி

## தமிழன் என்று........

**காட்சி-1**

"உங்கடை பேப்பர்........ புலிக்கு சப்போட் பண்ணி எழுதுதாமே"

"ஆர் சொன்னது"

"சொன்னாளை ஏன்... எழுதுறியள் தானே"

"எதை வச்சுச் சொல்லுறியள்?"

"பேப்பரில நீங்கள் எழுதின கட்டுரைகளை வைச்சுத்தான்!"

"குறிப்பாகச் சொல்லுங்கோ எந்தக் கட்டுரை?"

"நான் முழுக்க வாசிக்கேல்லை.... மற்றாக்கள் சொல்லிச்சினம்"

"அப்ப வாசிச்சுப் போட்டு கதையுங்கோ"

**காட்சி-2**

'என்ன வாசிச்சியளே'

"இல்லை... ஆனால் நீங்கள் அந்த Y எழுதின கட்டுரையை ஏன் போட்டனீங்கள்"

"ஏன் போட்டனீங்கள் என்று நீங்கள் கேட்கிறது பிழை. அது எங்கடை உரிமை. அதிலை என்ன பிரச்சினை எண்டு சொல்லுங்கோ"

"அது புலியளை நியாயப்படுத்தியிருக்குது"

"எப்பிடி.... கொஞ்சம் விளக்கமா சொல்லுங்கோ"

"இப்ப உது கதைக்க எனக்கு நேரமில்லை பிறகு பாப்பம்"

"பிறகெண்டால் எப்ப?"

"நான் Phone பண்ணுறன்"

**காட்சி-3**

"உங்கடை பத்திரிகையை வெளியிடுற நிறுவனத்தை நீங்கள் பயன்படுத்திறியள்"

"எப்பிடி எங்களுக்கு விளங்கேல்லை"

"அதுக்கு சம்பந்தமில்லாத கொள்கையை நீங்கள் எழுதி அதின்ரை தலையிலை கட்டுறியள்"

"எந்தக் கொள்கை... உதாரணமா?"

"கன விசயங்களை.. நீங்கள் அதையும் அழிக்கப் போறியள்"

"உங்களுக்கு அவ்வளவு அக்கறை எண்டால் அந்த நிறுவனத்தோடை போய் பேசுங்கோ...... ஆனால் எதையும் ஆதாரபூர்வமா சொல்லப் பாருங்கோ"

**காட்சி-4**

"என்ன நடந்தது"

"ஒண்டுமில்லை"

"பிரச்சினை எப்பிடிப் போச்சுது"

"ஒரு பிரச்சினையுமில்லையே...."

"அப்ப நீங்கள் திருந்த மாட்டியள்"

**காட்சி-5**

"இவையளை எப்பிடிச் சந்தோசப்படுத்திறது"

"சரிநிகரை நிப்பாட்டினால் சரி"

"அதெப்பிடி?"

"அப்பதான் இவைக்கு திருப்தி வரும்; நிம்மதி"

"அப்ப என்ன செய்ய?"

"எனக்குத் தெரியேல்லை."

"அவையையே கேப்பம்"

"கேட்டுப் பார்"

**காட்சி-6**

முடிவு : தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா.
தடியெடுத்து குழி பறித்து
தலைமையேற்று வாழடா....

0 0 0

முகத்துக்கு முன்னால் சிரி;
முடிந்தால் நழுவு
முதுகுக்குப் பின்னால் குத்து
முடிந்தால் கொல்

0 0 0

தமிழன் என்று ........

## தமிழனா நீ?

மஹரகமவில் வெடித்த 'செய்நேர்த்தி அற்ற' குண்டு வெடிப்புக்கு புலிகள் காரணமாக இருக்க முடியாது. இது வேறு 'சிலருடைய' செயல் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்ட போதும், வீடுவீடாக சென்று 'திடீர்தேடுதல்' வேட்டைகளை பொலிசார் தொடர்கின்றனர்.

ராஜிவ் கொலையில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் சிவராசனுடைய தகப்பனார் கொழும்பில் இருப்பதாகவும், வெடி குண்டுகள், கொலைப்பட்டியல்கள் சகிதம் புலிகள் கொழும்பு வந்திருப்பதாகவும் 'தமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் பேரில்' இந்த தேடுதல் நடைபெறுகிறதாம்.

புதுவருடத்தை ஒட்டி நடந்த தேடுதல் வேட்டையில் 60 வயது நிரம்பிய வயோதிபர் உட்பட பலரை அள்ளிக் கொண்டுபோய் நீர்கொழும்பு சிறையில் அடைத்து வைத்திருக்கிறது பொலிஸ் என்று கேள்விப்பட்டு, சிறைச்சாலைக்குச் சென்றோம்.

குறுக்காகப் போடப்பட்ட ஒரு மேசைக்கு அப்பால் அவர்களை வரிசையாக நிற்க வைத்து இப்புறமாக எம்மை நிற்கவைத்துப் பேசச் சொன்னார்கள். ஒரே நேரத்தில் பதினைந்து பேரை வரிசையாக நிற்கவைத்து பேசச் சொன்னால் எப்படிப் பேசமுடியும்?

தனது அறுபது வருட வாழ்க்கையில் பொலிஸ் நிலைய வாசல்படியே மிதித்திராத அந்த அப்பாவி வயோதிபர் செய்த ஒரேயொரு குற்றம், கொழும்புக்கு வந்ததுதான் என்று விம்மினார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஒரு வாரத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் அடைக்கப்பட்டுள்ளனர். 10 நாட்கள் தொடர்ச்சியான விடுமுறை காரணமாக அவர்கள் நீதி மன்றத்துக்குக் கொண்டுவரப்படவுமில்லை.

புதுவருடம் அவர்களுக்கு அங்குதான் பிறந்தது.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் என்ற வேறுபாட்டை இக்கைதுகளின் போது பொலிசார் கணக்கெடுப்பதில்லை.

அவர்கள் கவனிப்பதெல்லாம் ஒன்றுதான், தமிழனா நீ"

இலங்கை அரசின் பல்லின, பன்மொழி கலாசாரம் வாழ்க!

## அற்புதமான தேசம்

பாலியகொட சந்தியில் புதிதாகவும் மிகவும் வேகமாகவும் நடந்து கொண்டிருப்பது என்ன என்ற சந்தேகம் உங்களில் யாருக்காவது ஏற்பட்டிருக்கக்கூடும்.

ஏற்கனவே அழகுக்காக அதில் இருந்த பூஞ்செடிகள் அகற்றப்பட்டு ஒரு பௌத்தசிலை வைப்பதற்கான கட்டிட வேலைதான் அங்கு நடந்துகொண்டிருக்கிறது.

சார்க் மகாநாட்டின்போது விமான நிலையத்திலிருந்து முக்கிய புள்ளிகள் வந்தபோது இந்த சந்தியைக் கடந்துதான் சென்றார்கள். அவர்கள் வரும்போது இது ஒரு பௌத்த தேசம்' என உணர வாய்ப்பாகவும் முழிப்பாகவும் ஒன்றும் இருக்கவில்லை என்ற ஆதங்கம் இப்படிச் செயலுருப் பெற்றதாகக் கேள்வி.

சந்திகள் தோறும் புத்தர் சிலையும் பௌத்த கோவில்களும் முளைப்பது ஒன்றும் புதிய அற்புதம் அல்ல. அரச மதம் அது: அதனால் அடிக்கடி அப்படி நடக்கும்.

ஆனால், ரூபவாஹினியும் 'ஷ்றி லங்கா' வின் ஏரிக்கரைப் பத்திரிகைகளும் பிரச்சாரப்படுத்தும் ஜனாதிபதியின் 'சர்வமத சமரச' கொள்கை இந்த விடயத்தில் என்னாயிற்று?

எங்காவது ஒரு சந்தியில் ஒரு பிள்ளையார், ஒரு யேசு சிலை நிறுவப்படவில்லையே என்ற ஆதங்கமல்ல இப்படிக் கேட்பதற்குக் காரணம் - அது உண்மை என்ற போதும்.

நடைமுறையில் கடைப்பிடிக்காத பௌத்தத்தைக் கடைப்பிடிப்பதாகக் காட்ட மூலைக்கு மூலை, சந்திக்குச் சந்தி பௌத்த கோவில்களை எழுப்புவதால், வீசும் 'இரத்த வெடிலை' மறைத்துவிட முடியுமா என்ன?

தமிழர்களுக்கு பௌத்தகோயில்களும் சிலைகளும் ஒடுக்குமுறையின் சின்னம் என்றால், சிங்கள பௌத்தர்களுக்கு அது ஒரு சுத்த ஏமாற்று.

நிலத்துக்குக் கீழ் கபாலங்களும், மேலே பௌத்த சிலையும்....

ஒரு அற்புதமான தேசம் இது.



சரிநிகர், மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்;

ஆசிரியர்
'சரிநிகர்'
6, அலோசாலை,
கொழும்பு - 3.

சந்தா;
ஒருவருடம் :
உள்நாடு: 60/-
வெளிநாடு: 15 US $

சந்தாவை காசுக்கட்டளை/ தபாற்கட்டளை/ காசோலை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்






கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வந்து தங்கியிருக்கிற பெரும்பாலான வடக்குத் தமிழர்களின் பொருளாதாரம் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருகின்ற 'பணம்'தான். வங்கிக் கணக்கு. 'ட்றாப்ட்' என்பவை மட்டுமல்லாமல் தனியார்கள் பணம் பெற்று மாற்றிக் கொடுக்கிற ஒரு முறைமையும் நடைமுறையில் உள்ளது. இதன்படி, ஐரோப்பிய நாடொன்றில் இருக்கும் ஒருவர் தனது பணம் அனுப்பப்பட வேண்டியவரின் பெயர், விலாசம், டெலிபோன் இல. என்பவற்றை எழுதி அனுபவேண்டிய பணத்தை அங்குள்ள ஏஜண்ட்டிடம் கொடுக்க வேண்டும். மறுகணமே தகவல் அங்கிருந்து ஃபக்ஸ் மூலம் பறந்துவந்து விடும்- இங்குள்ள ஏஜண்டுக்கு.

இந்த ஏஜண்ட் உடனடியாக இப்பணத்தை வீடு தேடி கொண்டுவந்து கொடுக்கிறார்.

கொழும்பில் உத்தியோகம் பார்த்து மணியோடரில் பணம் அனுப்ப அதை எடுத்து சீவித்த யாழ்ப்பாணத்திற்கும் இதற்கும் ஒரு அடிப்படை வித்தியாசம் உண்டு. அப்போது அனுப்பப்பட்ட பணம் இலங்கையிலிருந்து இலங்கைக் குள்ளேயே அனுப்பப்பட்டது. அதன் பெறுமதி, அதை உழைப்பதற்கான கஸ்டம் என்பன பணத்தைப் பெறுபவராலும் உணரப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் பணம் அப்படி அல்ல. அது இங்கு வரும் போது 25 முதல் 70 வரையான மடங்குகளாகப் பெருகுகிறது. பெரியளவு தொகையாக இங்கு வந்து சேர்கையில் அது மாறி விடுகிறது. இந்தப் "பெருந்தொகை" கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பொறுப்பற்ற ஒரு போக்கினைத் தமிழர் மத்தியில் வளர்த்து விட்டிருக்கிறது.

பொருட்களை வாங்கும் போது விலைக்காகச் சண்டை பிடித்து நாலுகடை ஏறி இறங்கி வாங்கிய நிலை மாறிவிட்டது. வாங்கப்படும் பொருளின் பாவனைக்காலம், பயன்பாடு என்பன கருதி வாங்கப் படுவதற்குப் பதிலாக பெருமை, அந்தஸ்து போன்ற காரணங் களுக்காக இவை வாங்கப் படுகின்றன. குழந்தைகளுக்கான விளையாட்டுப்பொருட்களில் இருந்து வயது வந்தவர்கள் பாவிக்கின்ற பொருட்கள் வரை பயனற்ற பொருட்களை வெறும் டாம்பீகக் காரணங்களுக்காக வாங்குகிறார்கள். இப்பொருட்களுக்கு இவர்கள் கொடுக்கும் பணம் திரும்பவும் இந்த நாடுகளுக்கே திரும்பிப் போய்விடுகிறது. விலைகளைப் பற்றி அக்கறைப் படாது பொருட்களை வாங்குவதால், 'யாழ்ப்பாணத்தார்' என்றதும் பொருட்களை இரண்டுமடங்கு விலைகூட்டி கூறிவிடுகிறார்கள் கடைக்காரர்கள்.

கல்கிசை முதல் ஜா எலை வரையான முழு இடங்களிலும் இவர்கள் ஹோட்டேல்கள், தனி வீடுகள் என்பணவற்றை வாடகைக்கு எடுத்து இருக்கிறார்கள் வாடகைக்காக வீட்டுச் சொந்தக்காரர் கேட்கும் பணத்தையிட்டு இவர்கள் அக்கறைப்படுவதில்லை. ரூ.2000 முதல் ரூ.8000 வரை வாடகை கொடுத்து இவர்கள் இருக்கிறார்கள். கொழும்பின் சராசரி வாசி ஒருவருக்கு கற்பனை பண்ணமுடியாத வாடகைப்பணம் இது. இந்த வாடகை ஏற்றம் கூட கண்மூடித்தனமாகக் காசைக் கொடுப்பதால்/கொடுக்கத் தயாராக இருப்பதால் ஏற்பட்ட ஒன்றுதான்.

இதுமட்டுமல்ல, இலங்கை அரசின் 'இனசமத்துவ' நடவடிக்கைகளின் காரணமாக அடிக்கடி கைதாகும் இளைஞர்கள் சாதாரண சட்டப்படி விடுவிக்கப்பட வேண்டும் என்ற போதும், பொலிசுக்கும், பெரியவனுக்கும் காசைக் கட்டி வெளியிலே எடுக்கிறார்கள். காசு ருசிகண்ட பொலிசோ அடிக்கடி ஆட்களைப் பிடிக்கிறது. அரசாங்க சட்டம் இதற்கு வசதியாக இருப்பதால் எதுவும் செய்ய முடியவில்லை. அரசின் கைதுகளுக்கு எதிராக ஏதாவது செய்ய நினைப்பவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துவிட்டு இவர்கள் காசை வீசி வெளியே கொண்டுவந்து விடுகிறார்கள்.

ஒவ்வொரு நாளும், இப்போது மழைக்காலக்காளான்கள் போலப் பெருகியுள்ள 'கொமுனிக்கேசன் சென்ரர்'களின் முன்னால் பலர் தவமிருக்கிறார்கள். இந்தக் 'கொமுனிக்கேசன் சென்ரர்'கள் கொழும்பின் மூலை முடுக்கெங்கும் பெருகிவிட்ட ஒரு லாபம்தரும் வியாபாரமாகி விட்டது. இரண்டு டெலிபோன்களை வைத்துக் கொண்டு வேறெந்த முதலுமின்றியே வியாபாரம் நடக்கிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தாரை குறிவைத்தே இந்தக் 'கொமுனிக்கேசன்' நிலையங்கள் உருவாகி உள்ளன. அங்கு நடக்கிற விவகாரங்கள் மிகவும் சுவையானவை. கொழும்பின் 'கொமுனிக்கேசனில்' நடந்த சம்பவம் இது.



ரெலிபோன் இலக்கமிடப்பட்ட கூண்டுகள் ஒருபுறம். மறுபுறம் வரிசையாக டெலிபோன் வருகைக்காக காத்திருப்பவர்கள். தடித்த கண்ணாடிச் சுவருக்குப் பின்னால் டெலிபோன்களை இயக்கியபடி பெண்களும் ஆண்களுமாய்........

"தம்பி... ஜேர்மனிக்கு கோலெடுக்க எவ்வளவு?"

"இப்ப எண்டால் நூற்றி இருபது ஒரு நிமிசத்துக்கு"

"இப்ப எத்தினை மணியிருக்கும் அங்கை"

"காலை ஆறு மணியிருக்கும்....? என்றபடி பின்புறமாக திரும்பி நேரத்தைப் பார்த்துவிட்டு சரியான நேரத்தைச் சொல்கிறார் "ஐஞ்சு அம்பது"



"இப்ப கதைச்சால் அட்ட பிடிக்கலாம்"

"ஓ.... இதுதான் சரியான நேரம். நித்திரைப் பாயிலை வைச்சு அமத்தலாம்..."-சிரிக்கிறார் அவா.

"அப்ப தம்பி ஒருக்கா கதைக் கோணும்"

"நீங்க கதைக்கோணுமோ அவையை எடுக்கச் சொல்லவோ?"

"அவையை எடுக்கச் சொல்லுங்கோ"

அப்ப ஒரு நிமிச கோலெடுத்து நம்பரைச் சொல்லுறன். அவைஎடுக்கலாம். ...... "றிசீவிங் கோல்" ஒரு நிமிசத்துக்கு மூன்று ரூபா.

"சரி"

இங்கே வந்து பேசியவர் டெலிபோனை மலிவாக எப்படிப் பாவிக்க முடியும் என்றோ 'றிசிவிங் கோல்'க்கு இவ்வளவு அதிகமாகப் பணம் கொடுப்பது அவசியமா என்பது பற்றியோ, ஜேர்மனியில் இருக்கும் உறவினர் இவர் சொன்னவுடன் டெலிபோன் எடுக்க வசதியாக இருக்கிறாரா என்பது பற்றியெல்லாம் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. காரணம் எல்லாம் 25 மடங்காக பெருத்து இங்கு வந்து சேரும் பணம்தான். இவரது மகனோ அல்லது உறவினரோ இலங்கைப் பணத்தில் 40 முதல் 60 ஆயிரம் வரை சமபாதிக்கிறார் என்ற விடயமும், அவர் அங்கு வீடு, கார் கூட வைத்திருக்கின்றார் என்ற விடயமும் இவரைப்பொறுத்தளவில் அவர் குபேர வாழ்வு வாழ்வதான உணாவில இருக்கும்படி செய்திருக்கக்கூடும் தான் ஒரு நிமிடக் கோல் எடுத்தவுடன் அவர் உடனே திருப்பி எடுப்பது ஒன்றும் கஸ்டமான காரியமல்ல என்று இவர் நினைத்திருக்கக் கூடும்.

இவர் மட்டுமல்ல இப்படித்தான் இங்குள்ள பலர் நினைக்கிறார்கள். இவர்கள் இங்கு இலங்கை ரூபாயில் கணக்குப் பார்த்து அவர்கள் வசதியாக இருப்பதாக கற்பனை பண்ணுவதற்கு மாறாகவே அங்குள்ளவர்களின் வாழ்க்கை அமைந்திருக்கிறது. 'பெரிய ரெஸ்ட்ரோன்டுகளின் சமையலறைகளில் பாத்திரம் கழுவுபவர்களாகவும், சமையலாளர்களாகவும் இன்னும் இவை போன்ற கடின வேலைகளை செய்பவர்களாவும் இருப்பதன்மூலம் அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை இருபத்தைந்தால் பெருக்கிப் பார்த்துவிட்டு அவர்கள் பெரிய வசதிகளுடன் இருப்பதாகக் கருதுவது சரியான மடமை. பாத்திரம் கழுவுவது என்பது எப்படிப்பட்டது என்பதை இங்குள்ள நிலைமைகளுடன் ஒப்பிட்டு ஒருவர் புரிந்து கொள்ள முடியாது. அங்குள்ள அன்றாட செலவீனங்களும் அப்படியே' என்கிறார் அண்மையில் ஜேர்மனி சென்று திரும்பிய நண்பர் ஒருவர்.

சராசரி 1500–2000 மார்க் வரை சம்பளம் வாங்குபவர்களாக உள்ளனர் எமது இளைஞர்கள். இவர்கள் ஏஜன்சிக்குக் கட்ட வாங்கிய கடன்கள், வீட்டிலுள்ள பொறுப்புக்கள், வெளிநாட்டில் இருப்பதன் காரணமாக த.வி.புலிகளுக்கு கொடுக்க வேண்டியது போன்ற பல்வேறு காரணங்களுக்காக நிறையவே மிச்சம் பிடிக்க வேண்டி உள்ளது. குடிநீருக்குப் பதில் ஏதாவது 'ஜூஸ்' அருந்த வேண்டிய நிலையிலுள்ள ஜேர்மனில் (குழாயில் வரும் நீரை யாரும் குடிப்பதில்லை. அது அசுத்தமானது என்று கருதுகிறார்கள். உலக யுத்தத்தால் ஏற்பட்ட இரசாயனக் கலப்பு காரணம் என்றும், இது கழிவு நீருடன் சேர்த்து வடிகட்டப்படுவதாலேயே என்றும் பல காரணங்களை சொல்கிறார்கள். சுத்தமான குடிநீர் தேவையானால் போத்தலில் அடைத்து வரும் நீரையே குடிக்கவேணும். அதுவும் பழச்சாறும் கிட்டத்தட்ட ஒரே விலை தான் என்கிறார்கள்) நாளாந்த செலவும் இலங்கையை விட 25 மடங்கு அதிகம் என இங்குள்ளவர்கள் உணர்வதாக தெரியவில்லை. உதாரணமாக ஒரு சிகரட் பக்கட்டின் விலை 4.5 மார்க் (ரூ 117 கிட்டத்தட்ட) இங்குள்ள bic போன்றதொரு சவரம் செய்யும் றேசரின் விலை 3 மார்க் (ரூ78 கிட்டத்தட்ட) எழுதுகிற சாதாரண ஒரெக்ஸ், றெனோலட போன்றதொரு போல்பொயின்ற பேனாவின் விலை 1.5,2 மார்க். கிட்டத்தட்ட 39, 52 ரூபா) இவை அங்குள்ள நிலைமையை விளக்கப் போதும் என்று நினைக்கிறேன்.

'நமது ஆடகள் அங்கு அரிசிச் சோறும் கறியுமாக இலங்கை உணவையே உண்கிறார்கள் அங்குள்ள காலநிலைக்கு உகந்த உணவு வகைகளை பாவிப்பது குறைவு. இதனால் இவர்கள் மிச்சம் பிடிக்கக் கூடியதாக உள்ளது. அரிசிச் சோறும் கறியும் தொப்பை வைக்க உதவுகிறதே ஒழிய ஜேர்மனிய வேலைத்தளங்களில் சக்கைபிழிய வேலைசெய்ய போதுமான சக்தியை கொடுக்கும் என்று எனக்குப படவில்லை......'

'இதைவிடவும் முக்கியமானது அவர்களது வேலை நேரம். எமது நாட்டைப்போல் அல்ல. ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாதபடிக்கு வேலை நேரம் வேறு வேறாக அமைந்துள்ளது. கணவனும் மனைவியும் வேலை செய்கிற குடும்பங்களில் கணவனும் மனைவியும் சந்திப்பது கூட வாரத்தில் ஒரு நாள் இரண்டு நாளாக அமைவதும் உண்டு என்று கூறுகிறார்கள் குழந்தைகளை சந்திப்பதும் அப்படியே. வேலை முடிந்து வந்தால் அசந்து தூங்குகிறார்கள் திரும்ப எழுந்து சாப்பிட்டு விட்டு வேலைக்குத் தயாராகுகிறார்கள்.....'

பொழுது போக்கு என்ற பிரச்சினை அங்கு இல்லை என்றே சொல்ல வேண்டும் பொழுது போதாத பிரச்சினையே அங்கு நிலவுகிறது. கிடைக்கிற அவர்களது சொற்ப நேரம் முழுவதையும் பெரும்பாலும் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் குப்பைத் தமிழ்ப் படங்கள் பிடித்துவிடுகின்றன. டெலிபோனில் தான் றூமில் இருப்பவர்கள் கூட அதிகநேரம் பேசிக் கொள்கிறார்கள்.

இங்கிருந்து பணம் அனுப்பு பணம் அனுப்பு என்று அவர்களது பணத்திலேயே டெலிபோன் செய்கிறவர்கள் அவர்களது கஸ்டத்தை விளங்கிக் கொள்வதில்லை. ஒரு கிலோ மீற்றர் தூரம் போவதற்குக் கூட பஸ்ஸிற்கு 1 மார்க் டிக்கட் எடுக்க வேணும அது இலங்கைப் பணத்தில் 26 ரூபா. இங்குள்ளவர்கள் அதை யோசிக்காமல் பணம் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். அண்மையில் ஜேர்மனியில் இளைஞர் ஒருவர் ஆற்றில் குதித்து தறகொலை செய்து கொண்டதாக சொன்னார்கள். வீட்டு நெருக்கடிக்கு பணம் அனுப்ப முடியாததால்! இங்கு அனுப்பும் பணத்தை சேர்த்து சிக்கனமாக செலவு செய்யாமல் ஊதாரித்தனமாக செலவ செய்கிறார்கள் என்று அங்கிருந்து கவலைப்படுகிறார்கள்.

நண்பர் தான தங்கியிருந்த போது அறிந்த வே்று சில விபரங்களையும் தெரிவித்தா

'இங்கு ளவர்கள் பணம் அனுப்பும்ப கேட்கும் போது அங்குள்ளவ கள் மரத்தில் பிடுங்கி அனுப்புவதாக தான் நினைக்கிறார்கள். அவர்கள் அனுப்புவது கஸ்டம் என்று சொன்னால் இங்குள்ள அவாது சகோதரியையோ சகோதரனையோ 'புலிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள்' 'கொழும்பில் பொலிஸ் பிடித்து வைத்திருக்கிறது' என்று கூறிக்கூட அதற்கு செலவு செய்ய பணம் அனுப்புமாறு கோரிப் பணம் பெற முயல்கிறார்கள். நான் அங்க நின்ற போது ஒரு நண்பருக்கு இப்படி நடந்தது!......'

'கார் வைத்திருப்பது நாங்கள் சைக்கிள் வைத்திருப்பது போல சாதாரண விடயம் அங்கு. கார் அங்கு ஒரு வசதியானவர்க்கான பொருள் அல்ல. அங்கு அது ஒரு சாதாரண மனிதனது வாகனமாக உள்ளது. 4000 மர்ர்க்கிற்கு-அதாவது ஒருவரின் 3 மாத ஊதியத்திற்கு ஒரு கார் வாங்க முடியும். அது அங்குள்ள

பார்க்க பக்கம் 05

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் - ஒரு மீளாய்வு நோக்கி -

தேசிய விடுதலைப் போராட்டம்-ஒரு மீளாய்வை நோக்கி.......... எனும் கட்டுரைத் தொடர் இது வரை ஆறு இதழ்களில் வெளியாகியுள்ளது. ஈழத் தமிழர் விடுதலை இயக்கம், தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை ஆகிய அமைப்புக்களினது வரலாற்றுப் பாத்திரம் குறித்த தனது அபிப் பிராயங்களை கட்டுரையாளர் முன்வைத்துள்ளார். இதில் சில அமைப்புக்களினதோ, நபர்களினதோ வரலாற்றுப் பாத்திரம் சரியாக வலியுறுத்தப்படாது போயிருக்கக் கூடும். அவ்வமைப்புக்கள் நபர்கள் பற்றிய விபரங்கள், புகைப்படங்கள், பிரசுரங்கள், வெளியீடுகள் போன்றன யாரிடமாவது இருப்பின் அவற்றை அனுப்பி வைத்தால் தேசிய விடுதலைப் போரில் பங்குபற்றிய அமைப்புக்கள், நபர்கள் பற்றிய விபரங்களைப் பூரணமாக வெளிக்கொண்டு வரமுடியும். இதற்காக உங்களால் அனுப்பப்படும் ஆவணங்களை பாதுகாப்பாக உங்களிடம் திருப்பியனுப்பியும் வைக்கிறோம்.

இன்றைய சூழலில் அனைவரது ஒத்துழைப்பும், கருத்துப் பரிமாற்றமுமே இத் தொடரைப் பூரணமாகக் கொணரத் துணை புரியும் என நம்புகிறோம்.

ஆ-ர்.

சென்ற இதழில் தமிழ் இளைஞர் பேரவையின் முதலாவது சிதைவிற்கான காரணங்கள் பற்றியும், சிதைவிற்கு பின்னரான தமிழ் இளைஞர் பேரவையின் செயற்பாடுகள் பற்றியும் பார்த்தோம். இவ் இதழில் **சிதைவிற்குப் பின்னரான தமிழ் இளைஞர் பேரவையின்** முக்கியத்துவத்தினைப் பற்றிப் பார்ப்போம்.

சிதைவிற்குப் பின்னரான தமிழ் இளைஞர் பேரவை தனிநாட்டுக்கான பிரச்சாரங்களை பரவலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தமை, அகதிகள் புனாவாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டமை, தமிழ்ப் பிரதேசத்திற்கான சுய பொருளாதார முயற்சியில் அக்கறை செலுத்தியமை, ஆயுதம் தாங்கிய அமைப்புகளுக்கு ஊக்கியாக செயற்பட்டமை, குடா நாட்டிற்கு வெளியேயான அரசியல் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை, பெண்களையும் முழுநேர வேலைகளில் ஈடுபடுத்தியமை என்பவை தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது.

### தனிநாட்டுக்கான பிரச்சாரத்தை பரவலாக்கியமை:-

சிதைவிற்குப் பின்னரான தமிழ் இளைஞர் பேரவை இச்செயற்பாடுகளில் மிக ஊக்கமாகச் செயற்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியினரைப் பொறுத்தவரை 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாட்டின் மூலம் தனி நாட்டுக் கோரிக்கையை பிரகடனப் படுத்தினார்களே ஒழிய அதனை நடைமுறையில் பிரச்சாரப் படுத்துவதற்கோ பரந்துபட்ட மக்கள் மத்தியில் அதனை எடுத்துச் செல்வதற்கோ முயற்சி எடுக்கவில்லை. இவ்வகையில் இதனைப் பாரிய பிரச்சாரமாக கொண்டு சென்றவர்கள் தமிழ் இளைஞர் பேரவையினர் ஆவர். அக்காலத்தில் தனிநாட்டுக்கோரிக்கை தொடர்பாகப் பல சந்தேகங்கள் மக்கள் மத்தியில் தோன்றி இருந்தது. அதில் பிரதான சந்தேகமாக இருந்தது சிறிய நிலப்பரப்பினைக் கொண்ட தமிழ்ப் பிரதேசம் பொருளாதார ரீதியில் ஒரு தனிநாடாக இயங்க முடியுமா? என்பதேயாகும். தமிழ் இளைஞர் பேரவையினரும் இச்சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளிலேயே முதலில் ஈடுபட்டனர். இது தொடர்பில் முக்கிய பங்காற்றியவர் காலஞ்சென்ற **இறைகுமாரன்** ஆவார். மக்களின் சந்தேகத்தை நீக்கும் வகையில் இவர் எழுதிய **"சின்னஞ்சிறு நாடுகளும் தமிழ் ஈழமும்"** என்ற நூல் பிரதான நூலாக விளங்கியது இந் நூலில் அவர் உலகில் உள்ள சிறிய நாடுகளையும் அதன் மக்கள் தொகை, பொருளாதார வளம், என்பவற்றையும் புள்ளி விபரத்துடன் கொடுத்து, இந்நாடுகளெல்லாம் தனித்தியங்க முடியுமாயின் ஏன் தமிழ் ஈழத்தினால் தனியாக இயங்க முடியாது எனக் கேட்டிருந்தார்.

இதைவிட தனிநாட்டின் அவசியம் பற்றி **"சுதந்திரன்"** பத்திரிகையிலும் இவர்களால் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. இவர்களின் பிரச்சாரங்கள் மக்கள் மத்தியில் முழுமையாக ஊடுருவுவதற்கு போதாததாக இருந்தாலும் மக்கள் மத்தியிலான பரந்துபட்ட பிரச்சாரத்திற்கு ஒரு ஆரம்பமாக இருந்தது எனலாம். குறிப்பாக மக்கள் மத்தியில் இருக்கும் முன்னணியினரைத் திரட்டுவதில் பங்காற்றியுள்ளனர் என்று கூறலாம்.

### அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டமை:-

சிதைவிற்குப் பின்னரான தமிழ் இளைஞர் பேரவையினர் அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கையிலும் கூடுதல் அக்கறை காட்டினாகள். 1977ம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான மலையகத் தமிழர்கள் வடக்கு, கிழக்கிற்கு புகலிடம் தேடிவந்தனர். அவர்களை குடியேற்றும் பணியில் இளைஞர் பேரவையினர் ஈடுபட்டனர்.

அகதிகள் புனர்வாழ்வுதொடர்பில் இவர்கள் மத்தியில் நிலவிய முக்கிய கருத்து தமிழ்ப்பிரதேசங்களின் எல்லைப் புறங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதாகும். இச கருத்தினை நிறைவேற்றும் வகையில் அகதிகள் பிரச்சினை தோன்றிய போது அவர்களை குடியேற்றுவதன் மூலம் எல்லைப்பிரதேசங்களைப் பாதுகாக்க முற்பட்டனர். வவுனியா, திருமலை, முல்லைத்தீவு போன்ற இடங்களில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து இவர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். **இறைகுமாரன், சந்ததியார், பேபி சுப்பிரமணியம், திலகவதி, உமா மகேஸ்வரன், ஊர்மிளா, மண்டூர் மகேந்திரன்** என்போர் இப்பணியினை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர்களாக விளங்கினர். இவர்களில் உமாமகேஸ்வரன் திலகவதி, ஊர்மிளா ஆகியோர் அரச பணியாளர்களாக இருந்தும் அதனை உதறித் தள்ளிவிட்டு இப்பணிகளில் ஈடுபட்டனர்.

உமா மகேஸ்வரன் அரச நில அளவையாளராகவும், திலகவதி, ஊர்மிளா என்போர் அரச எழுதுவினைஞர்களாகவும் கடமையாற்றியிருந்தார்கள். ஊர்மிளா, திலகவதி ஆகியோரின் சுறுசுறுப்பும், நிர்வாகத்திறமையும் தமிழ்ப் பெண்களின் பாரிய ஆற்றலினை அடையாளமிட்டுக் காட்டியது. தன்னந்தனியாக வன்னிப்பிரதேசக் காடுகளிலெல்லாம் அவர்கள் பயணம் செய்தார்கள். இவர்களோடு பின்னர் இணைந்து கொண்ட **கனகராணி, கருணாதேவி, தியாகி சிவகுமாரனின் தாயாரான திருமதி. பொன்னுத்துரை** ஆகியோரும் அகதிகள் புனர்வாழ்வில் ஈடுபட்ட தமிழ்ப் பெண்களில் முக்கிய மானவர்களாவர்.

அதுவும் சிவகுமாரனின் தாயாரான திருமதி பொன்னுத்துரை நெடுங்கேணியில் அமைந்திருந்த அகதிகள் குடியேற்றமான "கென் பண்ணையில்" பொறுப்பாளராகவும் சிறிது காலம் கடமையாற்றினார். இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வில் இவர்கள் ஈடுபட்ட போது பல தடவை படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாக நேரிட்டது. அக்கெடுபிடிகளில் அனேகமானவை கென், டொலர் பண்ணையிலேயே நடைபெற்றது. குறிப்பிட்ட காலம் அதன் பொறுப்பாளராக இருந்த பேபி சுப்பிரமணியம் பல தடவைகள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டிருந்தார்.

இவ் அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கை, பரந்துபட்ட தமிழ் மக்களின் நலனுக்காக உழைக்க வேண்டும் என்ற ஒரு கூட்டம், யாழ்ப்பாண மனோபாவத்தில் இருந்து விடுபட்டு வெளிவாத் தொடங்கியுள்ளது என்பதையும் வெளிக்காட்டியது. "கள்ளத்தோணி", வடக்கத்தையான் என யாழ்ப்பாணத்தவர்களால் புறக் கணிக்கப்பட்ட மலையகத் தமிழருக்காக் தமது சுக போகங்களை உதறி எறிந்துவிட்டு யாழ்ப்பாண சமூகத்தில் இருந்தே ஒரு இளைஞர் கூட்டம் மலையக மக்கள் மத்தியில் பணி செய்யத் தயாராக வெளி வந்தது. அத்தோடு குடாட்நாடு மட்டத்தில் இருந்த அரசியல் வேலைகளை குடாநாட்டிற்கு வெளியே நகர்த்துவதிலும் இப்புனர்வாழ்வு நடவடிக்கைகள் துணைபுரிந்தது. தேசிய விடுதலைப் போராட்டம் பல கடுமையான படிகளைத் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது என்பதையும் இது அனுபவ ரீதியாக இளைஞர்களுக்கு உணர்த்தியது. இவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் எல்லைப்பிரதேசங்களிலான அரசியல் வேலைகளிலும் பின்னர் தீவிரமாக ஈடுபட்டவர்கள் **"புளொட்(Plot)"** இயக்கத்தினரே ஆவார் இது தொடர்பில் **டொக்டர் இராஜசுந்தரத்தின்** பணி மகத்தானதாகும்.

### தமிழ் பிரதேசத்திற்கான சுய பொருளாதார முயற்சியில் அக்கறை செலுத்தியமை

தமிழ் இளைஞர் பேரவையினர் முகம் கொடுத்த பிரச்சினைகளில் பொருளாதாரரீதியாக தமிழீழம் தாக்குப்பிடிக்குமா? என்ற மக்களின் கேள்வி முக்கியமானதாக இருந்தமையினால் அது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளிலும், முயற்சிகளிலும் இவர்கள் கவனம் செலுத்தினர். இம் முயற்சியில் இவர்களுக்கு முன்னரே யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான மன்றத்தினரும், தமிழ் மன்றத்தினரும் அக்கறை செலுத்தியிருந்தனர்.

1977ன் பிற்பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ் விழாவின் போது தமிழ் பகுதியின் பொருளாதார வளங்களை சித்தரிக்கும் வகையில் கண்காட்சி ஒன்று நடாத்தப்பட்டது. அதில் தமிழ் ஈழத்தின் கடல்வளம், தரைவளம், கனிப்பொருள்வளம், பனைவளம், மனிதவளம் என்பன புள்ளிவிபர ரீதியாக காட்டப்பட்டு வடக்கு, கிழக்கு பிரதேசம் ஒரு தனிநாடாக பொருளாதார ரீதியாக நிலைத்து நிற்க முடியும் என்று எடுத்துக் காட்டப்பட்டது. அத்தோடு பொருளாதாரவளத்தை மேம் படுத்துவதற்கு மேலும் நாம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டிருந்தது. யாழ் பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலையை பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் சிலரால் நடாத்தப்பட்ட **"மனிதன்"** பத்திரிகை தொடர்ந்திருந்தது. "மனிதன்" இயக்கத்தில் கடமையாற்றிய **விமலதாஸ், ஜெயராஜ், அருட்திரு ஜெயசீலன், உரும்பிராய் ஜெகநாதன், ஜோதிலிங்கம், பாலநடராஜ ஐயர்** ஆகியோர் இப்பணியில் பெரும் பங்காற்றினர்.

யாழ் பல்கலைக்கழகத்தினராலும், "மனிதன்" இயக்கத்தினராலும் ஆய்வுரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுய பொருளாதார முயற்சிகளை நடைமுறையில் நிறைவேற்றும் பணிகளை தமிழ் இளைஞர் பேரவையினர் மேற்கொண்டனர். தாம் பொறுப்பேற்று நடாத்திய குடியேற்றத்திட்டங்களில் நமது பிரதேச மூலப்பொருட்களை பயன்படுத்தும் சுயகைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்தனர். அத்தோடு கூட்டுறவு விவசாயததையும் அறிமுகப் படுத்தினர். குடியேற்றங்களுக்கு புறம்பாக யாழ்குடாநாட்டின் பின்தங்கிய சேரிப்புறங்களிலும் இக்கைத்தொழில் முயற்சிகளை மேற்கொண்டனர். யாழ்ப்பாண நகரத்தில் நகர சுத்தி தொழிலாளர்கள் வாழும் "திட்டியில்" இவர்களால் உருவாக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலை இதற்கு நல்ல உதாரணமாகும்.

இன்னும் வரும்

**அன்னபூரணா**

தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ. மாவை சேனாதிராஜாவிடம் பேட்டி எடுப்பதற்காகச் சென்றிருந்தோம். சரிநிகரில் அன்னபூரணா எழுதும் தேசிய விடுதலைப் போராட்டம் - ஒரு மீளாய்வை நோக்கி... கட்டுரையில் தமக்கெதிரான விடயங்கள் எழுதப்படுவதாகக் கூறிப் பேட்டி தர மறுத்து விட்டார்.

## நாங்களோ பலர்

நாங்களோ பலர்-
வெவ்வேறு கூரைகளின் கீழிருந்த சிலரும்
வானத்தின்கீழ் கூரைகளே இல்லாத பிறருமாக.
அப்போதுதான் நாங்கள்
கனவுகளைத் தொடங்கியிருந்தோம்.
அப்போதுதான் பாடல்கள்
எங்கள் உதடுகளிலிருந்து வெளிவரத் தொடங்கியிருந்தன
அப்போதுதான் நாங்கள் நிமிர்ந்து நடப்பதற்குப்
பழகத் தொடங்கியிருந்தோம்.
ஆனால் எங்கள் கால்களோ குட்டை
பாதைகளோ அந்நியமானவை
எங்களை மோப்பம் பிடிப்பது எளிதாக இருந்தது
தப்பித்து ஓடுவது சாத்தியம் இல்லை
விரைவில் நாங்கள் வலையில் சிக்கினோம்.
எங்களது மூளைகள் சிதறடிக்கப்பட்டன
காலமும் வெளியும் குழம்பிப் போயின
எங்களிடம் வற்றிப்போனவை எவை?
எங்களது கிளர்ச்சிக் கனவுகளா?
அல்லது அவற்றின் துடிக்கும் நாளங்களா?


சிவிக் சந்திரன்
கேரளா

(கேரளாவைச் சேர்ந்தவர் கவிஞர் சிவிக் சந்திரன். முன்னர் மார்க்சிய-லெனினிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததோடு தெருநாடக இயக்கத்திலும் முக்கிய பங்கு வகித்திருக்கிறார்)

நன்றி : [illegible] உலகக் கவிதைகள்

நன்றி - நூலகத்திட்டம்





அமெரிக்காவால் தேடப்படும் உளவாளிகள் அவர்களது படங்களுடன்.

# அரபுத் தேசியவாதமும் அமெரிக்காவும்

ஐ.நாடுகள் பாதுகாப்புச் சபை ஏப்ரல் முதலாந் திகதி லிபியாவுக் கெதிரான 748ம் இலக்கச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் அச்சபை ஐ.நா பாதுகாப்புச் சபையல்ல அமெரிக்கப் பாதுகாப்புச் சபையே என இரண்டாவது தடவையும் நிரூபித்துள்ளது. ஏற்கனவே ஈராக்கிற் கெதிரான அமெரிக்க யுத்தத்தை நிறைவேற்றியதன் மூலம் அமெரிக்கப் பாதுகாப்புச் சபை என்பதை உறுதிப்படுத்தியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இத்தீர்மானத்தின் மூலம் லிபியாவுக் கெதிராக ஆயுதவிற்பனைத் தடை,விமானப் போக்குவரத்து தடை ராஜ தந்திர உறவுகளை ரத்துச் செய்தல் என்பவற்றை மேற்கொள்வதாக முடிவு செய்துள்ளது. அதற்கான காலக்கெடுவாக ஏப்ரல் 15ம் திகதி விதிக்கப்பட்டு லிபியா சரணடையாததால் தீர்மானங்களை அமுல்படுத்தவும் ஆரம்பித்துள்ளது. அமுல்படுத்தாத நாடுகளை நிர்ப்பந்திக்கவும் தொடங்கியுள்ளது.

1988ம் ஆண்டு ஸ்கொட்லாந்தின் மேலாகப் பறந்து கொண்டிருந்த அமெரிக்க விமானத்தினை குண்டு வைத்துத் தகர்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இரு லிபிய உளவாளிகளையும் அமெரிக்கா, பிரான்ஸ் அல்லது பிரிட்டனிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், 1989ம் ஆண்டு நைகரின் மேலாகப் பறந்து கொண்டிருந்த போது வெடித்துச் சிதறிய பிரான்ஸ் விமான விவகாரம் சம்பந்தமாக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி வேண்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்திற்கு எதிராக லிபியாவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றபோதும், தீர்மானத்திற்கு ஆதரவளித்த நாடுகளின் துதுவராலயங்கள் தாக்கப்பட்ட போதும், அரபு நாடுகளின் அமைப்பான அரபுலீக் பலமான கண்டனத்தைத் தெரிவித்த போதும் தீர்மானத்தை அமுல்படுத்துவதில் அமெரிக்கா மும்முரமாக உள்ளது.

ஆனால் எந்த நாட்டிடமும் அவர்களை ஒப்படைக்க முடியாது என்றும், எப்பிரச்சினைகளையும் எதிர்நோக்க நாம் தயாராக உள்ளோம் என்றும் லிபியா கூறியுள்ளது.

## அமெரிக்காவின் உள்நோக்கு

இப்பிரச்சினையில் அமெரிக்காவின் உள்நோக்கம் உளவாளிகளைப் பெறுவதல்ல. மாறாக அரபு நாடுகளில் வளர்ந்து வரும் அரபுத் தேசியவாதத்தை ஒழிப்பதன் மூலம் தனது வாரிசும் செல்லப் பிள்ளையுமான இஸ்ரேலைப் பாதுகாப்பதும், மத்திய கிழக்கில் தனது தலையாட்டி பொம்மைகளை (உ-ம் சவூதி அரேபியா) அரபுத் தேசியவாதத்தின் பிடியிலிருந்து பாதுகாப்பதுமாகும்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலக வல்லரசுச் சமநிலை என்பது குழம்பி அமெரிக்கா உலகின் ஏக பொலிஸ்காரனாக வந்தாலும் தனது ஆதிக்கத்தை பரவலாக்குவதில் மத்திய கிழக்கு, அமெரிக்காவுக்கு ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. மத்திய கிழக்கைப் பொறுத்தவரை அது இரு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாக உள்ளது.

1) அரபுத்தேசிய வாதம்
2) இஸ்லாமிய அடிப்படை வாதம்.

அரபுத் தேசியவாதத்தைப் பொறுத்தவரை அதனை முன்னெடுக்கும் நாடுகளாக ஈராக், லிபியா என்பன உள்ளன. இஸ்லாமிய அடிப்படை வாதத்தைப் பொறுத்தவரை அதனை முன்னெடுக்கும் பிரதான நாடாக ஈரான் உள்ளது.

ஆரம்பத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதம் ஈரானில் மன்னர் ஷாவின் வீழ்ச்சிக்கு பின்னர், ஈரானிய மதத்தலைவர் ஆயத்துல்லாஹ் கொமெய்னியினால் முன்னெடுக்கப் பட்டபோது அதனை நசுக்குவதிலேயே அமெரிக்கா முழுக்கவனம் செலுத்தியது. இஸ்லாமிய அடிப்படை வாதம் மத்திய கிழக்கு முழுவதும் பரவுகின்றபோது, தனது பொம்மை நாடுகளும் அவ்வலையினால் அள்ளப்பட்டுவிடுமோ என அஞ்சியது. பொம்மை நாடுகள் தனது பிடியிலிருந்து வீழ்ச்சியுறும் போது தனது எண்ணெய் கொள்ளையையும் மேற்கொள்ள முடியாது எனக் கருதியது. அதனோடு தன்னுடைய வாரிசான இஸ்ரேல் எனும் தேசம் இருந்த இடந்தெரியாமல் அழிந்து விடுமோஎனவும் அஞ்சியது. இதனால் தான் அதனை நசுக்கும் வகையில் ஈரானுக்கும், ஈராக்குக்கும் இடையில் இருந்த முரண்பாடுகளை பயன்படுத்தி ஈரானுக்கு எதிராக ஈராக்கை ஏவிவிட்டது. "எட்டு" வருடங்களாக தொடர்ந்து ஈரான்-ஈராக் யுத்தத்தில் ஈராக்கிற்கு தேவையான சகல ஆயுத உதவிகளையும் அமெரிக்கா கொடுத்தது. இவ் இஸ்லாமிய அடிப்படை வாதம் தனக்கு எதிராக திரும்பி விடுமோ என அஞ்சிய சோவியத் யூனியனும் ஆப்கானிஸ்தானுக்குள் அதனைபரவ விடாது தனது படைகளை அனுப்பியதோடு அல்லாமல் அமெரிக்காவோடு சேர்ந்து ஈராக்கிற்கு ஆயுத உதவிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் வழங்கியது. ஆனால் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு மேலாக அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் மத்திய கிழக்கில் அமெரிக்காவினது பொலிஸ்காரத் தனத்தையும் சிதைக்கும் வகையில் குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போது இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி அரபுத் தேசியவாதத்தை நசுக்கும் வகையில் ஈராக் மீது படையெடுத்தது.

தற்போது ஈராக்கின் எழுச்சி குறைந்துள்ள நிலையில் ஈராக்கின் நண்பனும் பலமான அரபுத் தேசியவாதத்தை கொண்டிருக்கிறதுமான லிபியாவை ஆக்கிரமிக்க முற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய, இஸ்ரேலுக்கு எதிரான ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் எனும் தீர்மானம், தென்னாபிரிக்க அரசிற்கெதிரான தீர்மானம்எல்லாம் கிடப்பில் இருக்கும் போது லிபியாவிற்கு எதிரான தீர்மானத்தை மாத்திரம் அவசரம் அவசரமாக நடைமுறைக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

## அரபுத் தேசியவாதம் வெற்றிபெறுமா?

லிபியாவை ஆக்கிரமிக்கும் முயற்சியில் அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையெனும் போர்வையில் முயற்சி செய்யும்போது இவற்றிற்கு ஈடுகொடுத்து அரபுத் தேசியவாதம் வெற்றி பெறுமா? என்பதே இன்றைய கேள்வியாக உள்ளது. உலகிலுள்ள ஏனைய நாடுகளில் வளர்ந்துவரும் தேசியவாதத்தைப் போன்றே அரபுத் தேசியவாதமும் பல குறைபாடுகளை தன்னகத்தேகொண்டுள்ளது. இக்குறைபாடுகள் நீங்கும் வரை அரபுத்தேசியவாதம் வெற்றிபெறுமென்பது சந்தேகமே. உள்நாட்டில் ஜனநாயக மறுப்பு, அனைத்து சக்திகளையும் இணைக்காமை, சாதாரண மக்களையும் பாதிக்கக் கூடிய பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை, உள்நாட்டில் தேசிய இன ஒடுக்குமுறையை மேற்கொள்கின்றமை, குறுகிய மதவாதம் என்பனஅரபு தேசியவாதத்தின் முக்கிய மான பலவீனர்களாக உள்ளன.

அரபுத் தேசியவாதத்தை பலமாக முன்னெடுக்கின்ற நாடுகளான ஈராக்கையும், லிபியாவையும் பொறுத்தவரை இக்குறைபாடுகள் அதிகளவில் உள்ளன. இந்நாடுகளில் உள்நாட்டு மக்களுக்கு ஜனநாயகம் வழங்கப்படுவதில்லை. அமைப்புகளுக்கு ஜனநாயகம் வழங்கப் படுவதில்லை. ஈராக்கில் அரபுத் தேசியவாதத்தோடு ஒத்துழைக்கக் கூடிய பல கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டனர். இந்த ஜனநாயக மறுப்பினால் எதிரிக்கெதிரான போராட்டத்தில் அனைத்து வர்க்கச் சக்திகளையும் இணைத்துக்கொள்ள இந்நாடுகளால் முடியவில்லை. அத்தோடு தத்தம் நாடுகளில் வாழும் தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமைகளையும் இந்நாடுகள் வழங்குவதில்லை. இதனால் அந்நாடுகளில் சிறுபான்மைத் தேசிய இனங்கள் மிகவும் மோசமான ஒடுக்குமுறைக்கு உட்பட்டவர்களாக காணப்படுகின்றனர். ஈராக்கில் "குர்திஷ்" இனமும் "ஷியா" முஸ்லிம் இனமும் ஒடுக்கப்படுகின்றமை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

அரபுத் தேசியவாதத்தின் மற்றைய பிரதான குறைபாடு சாதாரண மக்களையும் பாதிக்கின்ற வகையில் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்றமை ஆகும். எதிரிக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சாதாரண மக்கள் பாதிப்படையாமல் பார்க்க வேண்டியது அவசியமாகும். அதனை விடுத்து எதிரி நாட்டின் சாதாரண மக்களை தாக்குதலின் இலக்காகக் கொள்ளின் சாதாரண மக்கள் எதிரிக்குப் பின்னால் அணி திரளுவது தவிர்க்க முடியாததாகும். லிபியாவின் குண்டுத் தாக்குதலினால் சாதாரண மக்களே கொல்லப் பட்டனர். இதனால் உலக சாதாரண மக்களின் அபிப்பிராயமும் எதிரி நாட்டிலுள்ள சாதாரண மக்களின் அபிப்பிராயமும் இன்று அமெரிக்காவுக்குப் பின்னாலேயே திரண்டுள்ளது. இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டியது மிக அவசியமானதாகும்.

ஒரு பலமான எதிரிக்கெதிராகப் போராடும் போது உள்நாட்டில் பலமான ஆதரவு இருந்தால் மட்டும் போதாது. எதிரி நாட்டில் தமக்கு சாதகமானவர்களையும், திரட்டிக் கொள்ளுதல் அவசியமானதாகும். அவ்வாறு திரட்டும் போதே எதிரிக்கெதிரான போராட்டத்தை வீரியத்துடன் எடுத்துச் செல்ல முடியும். போராட்டம் நேர்மையானதாக இருப்பின் எதிரி நாட்டு மக்களும் அதனை ஆதரிக்கவே செய்வர். அமெரிக்காவின் வியட்னாமிய ஆக்கிரமிப்பின் போதும் ஈராக்கிய ஆக்கிர்மிப்பின் அதனை எதிர்த்து அமெரிக்க மக்களே வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள் என்பது வரலாற்றின் உண்மையாகும். இதனை விடுத்து எதிரிக்கெதிராகத் தாக்குதல் நடாத்துதல் என்ற பேரில் சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய நட்வடிக்கைகளை எடுப்பின் அது எதிரிக்கே சாதகமானதாக அமையும்.

அரபுத் தேசியவாதத்தில் எல்லாவற்றிலும் பார்க்கப் பிரதான குறைபாடு அதன் குறுகிய மதவாதமாகும். இக்குறுகிய மதவாதம் ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களை பாதிப்பதாகவுள்ளது. லிபிய ஆக்கிரமிப்பு தொடர்பாக லிபிய அதிபர் கடாபி கூறும்போது, "முஸ்லீம்களுக்கெதிரான கிறிஸ்தவர்களின் ஆக்கிரமிப்பு"என்றார். இவரது இக்கூற்று அமெரிக்காவின் ஆக்கிரமிப்பிற்கு சாதாரண கிறிஸ்தவ மக்களையும் உடந்தையாக்குகின்றது. இவர்களின் இக்குறுகிய மதவாதம் தற்காலிகமாக மக்களை அணிதிரட்டுவதற்கு உதவலாம். ஆனால் நீண்டகால வெற்றிக்கோ, சகல சக்திகளையும் எதிரிக்கு எதிராக திரட்டுவது என்ற கோட்பாட்டுக்கோ உதவப் போவதில்லை. எனவே இக்குறைபாடுகளை அரபுத் தேசியவாதம் வெற்றி கொள்ளும்போதே அமெரிக்காவிறகு எதிரான அரபு மக்களின் போராட்டம் வெற்றிபெறும். இல்லையேல் அமெரிக்கா ஆக்கிரமிப்பு வெறிக்கு சாதாரண மக்களை பலிகொள்ள நேரிடுமே தவிர அரபுத்தேசிய வாதத்தை வெற்றிக்குக் கொண்டு செல்ல முடியாது. தவறான அணுகு முறையால் ஈராக்கில் ஏற்பட்ட பலிகொடுப்பு அரபுத் தலைவர்களுக்கு இது தொடர்பில் ஒரு படிப்பினையாக இருக்கட்டும்.

**ஆதித்தன்**

## தமிழ் அகதி......

காலநிலைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இதனால் முடியுமானளவுக்கு கார் வாங்கி வைத்திருககவே எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் கார் வைத்திருப்பது காரணமாக அவர்கள் வசதியாக இருக்கிறார்கள் என்று கருத முடியாது. உதாரணமாக என்னிடம் ஒரு 300 மார்க் பணத்தை இங்குள்ள உறவினர் ஒருவரிடம் கொடுக்கும்படி தருவதற்காக ஒருவர் தன்னிடம் இருந்த பொருள் ஒன்றை விற்று விட்டுக கொடுகக வேண்டி இருந்தது. ஆனால் அவரிடம் ஒரு கார் இருந்தது. குடிப்பதில்லை (பியர் கூட) புகைப்பதில்லை, வேறு எந்த அநாவசிய செலவும் இல்லை. ஆனாலும் சைசே ஒரு பெனிக் கூட மிஞ்சுவதில்லை...' கடன் தான் மிஞ்சுகிறது' என்று சொன்னார் அவர். (பேசும் போது வரிக்கு வரி 'சைசே' என்ற டொச வார்த்தையை உபயோகிக்கிறார்கள். முதலில் அவர்கள் 'ஐசே' என்று சொல்வதாக நினைத்தேன். பிறகு விசாரித்ததில் இந்த வார்த்தையின் அர்த்தம் 'மலம்' என்று தெரிய வந்தது.)

ஜெர்மனியில் பிரமாண்டமான தொழிற்சாலைகளதும் நிறுவனங்களதும் இயந்திரங்களிலும் வேலைத்தளங்களிலும் நசிபட்டு பிழிபட்டு வேலை செய்கிறவர்கள் பலர் தமது உடலின் சக்திகளை இழந்து நோயாளிகளாகின்றனர். கோப்பை கழுவுகின்றவர்களின் கை விரல்களில் வெடிப்புகள் தோன்றுகின்றன. இரசாயன தொழிலகங்களில் வேலை செய்பவர்கள் புரியாத நோய்களுக்கு உள்ளாகின்றனர். நண்பர் ஒருவருக்கு இருமும் போது இரத்தம் வருவதாக கூறினார். வைத்திய வசதிகள் இருந்தபோதும் தமிழ் அகதிகளுக்கு கவனிப்பு குறைவே என்று ஒருவர் கூறினார். நாஜிகளின் செல்வாக்கும், அகதிகளுக்கு எதிரான போக்கும் அதிகரித்து வருவதால் வைத்தியர்களையும் நம்பமுடியவில்லை என்கிறார் அந்த இரத்தம் வருகிற நணபர். வைத்தியர்கள் அவருக்கு ஒன்றுமில்லை என்று சொல்கிறார்களாம! ஒன்றுமிலலாமலேயே இரத்தம் வருகிற விந்தையை நீங்கள் ஜேர்மனியில் தான் பார்க்க முடியும்!' என்கிறார் அவர்.....

'ஜேர்மனி மட்டுமல்ல, கனடா சுவிஸ், பரிஸ் என்று எல்லா இடஙகளிலும் உளளவர்களின் நிலை இதுதான். 100% கணபார்வை கூர்மையுள்ளவர்களை டெலிவிஷனில் கலர் மிச்சிங் ஆய்வுகூடத்தில் வேலைக்கு சேர்க்கிறார்கள். அநேகமாக மூன்றாம உலகநாட்டு அகதிகளே இதில் வேலைக்குப் போகிறார்கள். 2000 மார்க் சமபளம் அவர்களை அதில் சோவைக்கிறது. ஆனால் மூன்று நான்கு ஆண்டுகளில் அவர்களது கண்ணின் கூர்மை 50% ஆகிவிடும். அதன் பிறகு வேலையை விட்டு நிறுத்திவிடுவார்கள். .... இப்படி உயிரைக் கொடுதது உடலைக் கொடுத்து உழைக்கிற எங்கடை ஆக்களை சாதிலை அங்கை சனம் லெவல் காட்டுதாம். பஸ்ஸிலை போகாமல் ஓட்டோவும் டக்சியும் தான் பாவிக்கினமாம். உண்மையே அண்ணை' என்று கேட்டார் என்னை ஒருவர்.

நன்றி - நூலகத்திட்டம்





முன்னை நாள் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல அவர்கள்.

முன்னைநாள் பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. பிரேமதாசா உடுகம்பொல 1992 ஜனவரி 31ம் திகதி கையளித்த சத்தியக் கடுதாசி இது. ஐ.தே.க. வின் வடமேல் மாகாண, மாகாண சபை உறுப்பினரும், சமாதான நீதவானுமான டி.பி.என். போதொட முன்னிலையில் இச் சத்தியக்கடுதாசி கையெழுத்திடப்பட்டுள்ளது. இலங்கையில் நடைமுறையிலிருக்கும் **ஜனநாயகத்தின்** வெட்டுமுகத்தை (**Actually existing Democracy!**) புரிந்து கொள்ள இது ஒரு முக்கியமான ஆவணம் என்பதால் இதனை முழுமையாகப் பிரசுரிக்கிறோம். இதில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் திரு. பிரேமதாஸ உடுகம்பொலவினதுடையவே அன்றி சரிநிகர் பத்திரிகையின் கருத்தல்ல என்பதனையும் குறிப்பிடுகிறோம். இந்த ஆவணத்தை இலங்கையில் எந்தத் தமிழ்ப்பத்திரிகையும் பிரசுரிக்க முன்வரவில்லை.



இலங்கையில், கொழும்பில் வாழும் பிரேமதாச உடுகம்பொல ஆகிய நான் பௌத்தன் என்ற வகையில் நேர்மையாகவும், உண்மையாகவும் உறுதிப்படுத்திப் பின்வருவனவற்றைக் கூறுகிறேன்.

நான் பிறப்பில் இலங்கையன் ஆவேன். 1935 மே 15இல் பிறந்தேன். தற்போது வயது 56. இற்றைக்கு சில காலத்துக்கு முன்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்றவகையில் விசேட செயலணிப்பிரிவுக்கு (நடவடிக்கை) பொறுப்பாகச் செயற்பட்டேன். காலி மகிந்த வித்தியாலயத்தில் கல்வி கற்ற நான் 1957ல் தகுதிகாண் உதவிப் பொலிஸ் அதிபராக இலங்கைப் பொலிஸ்-திணைக்களத்தில் சேர்ந்தேன். 1966ல் உதவிப் பொலிஸ் அதிபராக பதவி உயர்வு பெற்றேன். 1978ல் உதவிப் பொலிஸ் அத்தியேட்சகராக பதவி உயர்வு பெற்றேன். 1982இல் பொலிஸ் அத்தியேட்சகராகவும் 1983இல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகராகவும் பதவி உயர்வு பெற்றேன். 1988ல் பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்றேன்.

நான் ஓய்வு பெற முன்னர் என்னைக் கட்டாய லீவில் அனுப்புமாறு ஜனாதிபதி திரு.ஆர். பிரேமதாச அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் திரு. சிறில் ரணதுங்க 1992 ஜனவரி 15இல் எனக்கு அறிவித்தார். இந்த அறிவித்தல் எனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருமான மறைந்த ஜெனரல் திரு ரஞ்சன் விஜயரட்ன அவர்களின் சிபார்சின்படி ஜனாதிபதியால் 1991 ஜனவரி முதல் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட விசேட நடவடிக்கைச் செயலணியின் தலைவராகவும், பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் சேவையாற்றிக் கொண்டிருந்தேன். விசேட நடவடிக்கைச் செயலணியானது போதைப் பொருட்களின் பாவனை, ஊழல்கள், கள்ளக்கடத்தல், பயங்கர வாதம் என்பவற்றுக்கு எதிராக தீவு பூராகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விசேட செயலணிப்பிரிவாகும்.

சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் தமது 50வது வயது பூர்த்தியாகும் போது தொடர்ந்தும் சேவையாற்ற விரும்பினால் சேவையை நீடிக்குமாறு ஆண்டுதோறும் கோர வேண்டும் என நானறிவேன். 1986இல் எனக்கு 50வயது பூர்த்தியானபோது அது முதல் எனது சேவையை நீடிக்குமாறு நான் கோரினேன். மேற்படி சகல சந்தர்ப்பங்களிலும் எனது சேவை நீடிக்கப்பட்டது. எனது 60 வயதுவரை சேவை நீடிப்பு தொடர்ந்தும் செய்யப்பட்டு இருக்க வேண்டும். என்னை விட வயதில் மூத்த - ஓய்வு பெறும் வயதெல்லையை அடைந்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் விசேட சேவைக்காகப் பாதுகாப்பு அமைச்சரும், ஜனாதிபதியுமானவர் சேவை நீடிப்பு வழங்கினார் என்பதையும் நான் அறிவேன். இவ்வாறு சேவை நீடிக்கப்பட்ட நபர்கள் நிரந்தர பொலிஸ் சேவையிலும் வேறு சேவைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸ் சேவைக்கு வெளியே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்கள் விசேட கடமைகளுக்காகவும், ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும் இரகசிய நடவடிக்கைகள் உட்பட விசேட பணிகளிலும் ஜனாதிபதி அவர்களால் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் சேவை நீடிப்பு வழங்கப்பட்ட சில சிரேஸ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் வருமாறு:

(அ) தற்போதைய பொலிஸ் மா அதிபர் திரு. ..........................

(ஆ) இரகசிய பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. எம்.டி.ஏ. ..........................

(இ) பதுளைப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ..........................

திருவாளர்கள் ........ .......... ஆகிய இருவரும் 60 வயதைப் பூர்த்தி செய்தமையால் விசேட சேவை நீடிப்பைப் பெற்றவர்கள். தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களும் ஏனைய சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும் பான்மையினரும் பல ஆண்டுகளுக்கு முன்பு 50 வயதை எட்டியவர்கள். ஆண்டு சேவை நீடிப்பின் மூலம் அவர்கள் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஓய்வு பெற்ற போதிலும் சேவை நீடிப்புப் பெற்று நிரந்தர பொலிஸ் சேவைக்கு வெளியிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ள சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:

(அ) முன்னைய பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. ஏ.சி லோ.......

(ஆ) முன்னைய பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. பே.......

(இ) முன்னைய பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. எஸ்.எஸ். ஜோ.....

நிலைமை இவ்வாறு இருக்க 1992 ஏப்ரல் நடுப்பகுதியில் நான் ஓய்வு பெற முன் என்னைக் கட்டாய லீவில் அனுப்ப வேண்டும் எனவும், எனது சேவை நீடிக்கப்படக்கூடாது எனவும் ஜனாதிபதி அவர்கள் தீர்மானித்துள்ளார்கள் என மேற்கூறிய பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் எனக்கு அறிவித்தபோது நான் ஆச்சரியப்பட்டேன். நான் எதிர்பாராத இத்தீர்மானம் பற்றி எனக்கு எதுவித காரணமும் காட்டப்படவில்லை.

எவ்வாறாயினும் 1992 ஜனவரி 10ம் திகதி "சண்டே ஒப்சேவர்" பத்திரிகை (அரசால் நிர்வகிக்கப்படும், பொதுவாக அரச செய்திகள், தீர்மானங்கள் என்பன வெளியிடப்படும் பத்திரிகை) தனது முறப்பக்க செய்தியாக எனது சேவை நீடிப்பை மறுத்தமைக்கு 3 காரணங்களைக் குறிப்பிட்டிருந்தது.

(1) எனது தலைமையின் கீழ் இயங்கும் விசேட நடவடிக்கைச் செயலணியின் நடவடிக்கைகள் அதிகரித்தன. சில சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், மனித உரிமைகள் அமைப்புக்களினதும், எதிர்க்கட்சிகளினதும் கண்டனங்களுக்கு ஆளாகி உள்ளமை.

(11) மனித உரிமை அமைப்புகள் மட்டுமன்றி பொலிஸ் திணைக்களத்தின் எனது சக உத்தியோகத்தர்களினதும் கண்டனத்துக்கு ஆளாகி உள்ளமை.

(111) லியனாராச்சி வழக்கில் நீதிமன்றம் தென்பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ்

# தவறு

அதிபர் என்ற வகையில் எனக்கு எதிராக சில தீர்ப்புகளை வழங்கியுள்ளமை.

1992 ஜனவரி 19ல் இச்செய்தியை வெளியிட்ட சண்டே ஒப்சேவர் பத்திரிகை ஒன்றின் பிரதி ஒன்றை எனது சத்தியக் கடுதாசியின் பின்னிணைப்பாக இணைத்துள்ளேன். என்னைக் கட்டாய லீவில் அனுப்புவது பற்றியோ பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாகவோ இதுவரை உத்தியோகபூர்வமாக எனக்கு ஒன்றும் அறிவிக்கவில்லை.

விசேட நடவடிக்கைச் செயலணி செயற்படுத்திய நல்ல காரியங்கள் பற்றி தேசிய பத்திரிகைகள் அறிவித்து உள்ளன. ஆனால் என்னை கட்டாய லீவில் அனுப்பியது பற்றி எதுவித காரணங்களையும் மேற்படி தேசிய செய்திப் பத்திரிகைகள் கருத்து வெளியிடவில்லை.

என்னைக் கட்டாய லீவில் அனுப்பிய தீர்மானம் ஜனாதிபதியின் தனிப்பட்ட தீர்மானம் என்றும், மேற்படி தீர்மானத்தை எடுப்பதற்கான காரணங்கள் 1992 ஜனவரி 19ம் திகதி சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்குப் புறம்பான விடயங்கள் என்றும் நம்பத்தகுந்த சில காரணிகளை நான் ஏற்றுக் கொள்ள வேண்டி உள்ளது.

திரு. ஜே.ஆர். ஜெயவர்தனா எதிர்க்கட்சியில் இருந்த 1970ம் ஆண்டு கால கட்டத்தில் ஆரம்பத்தில் இருந்து சுமார் 20 வருட காலமாக பிரேமதாச அவர்களை நான் அறிவேன். குறிப்பாக 1988 டிசம்பர் மாதத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியேற்ற பின் எந்த ஒரு விடயத்தைப் பற்றியும் நேரடியாக கருத்து தெரிவுக்குமாறும், நெருக்கமான தொடர்பை வைத்து இருக்குமாறும் அவர் அறிவித்து இருந்தார். அவசியமான சந்தர்ப்பங்களில் சுச்சரித இல்லத்தில் அவரைச் சந்திக்குமாறும் எனக்கு அறிவிக்கப்பட்டு இருந்தது. அவருடைய பல அலுவலகங்களுக்கும் சுச்சரித இல்லத்துக்கும் நான் அழைக்கப்பட்டு பல விடயங்கள் எனக்கு கூறப்பட்டுள்ளது. கூறப்பட்ட பல விடயங்கள் உத்தியோகபூர்வமானவை, சில உத்தியோக பூர்வமற்றவை. அரசியல் விடயங்களும் இவற்றுள் உள்ளடங்கும்.

மறைந்த ஜெனரல் ரஞ்சன் விஜயரட்ன என்னைப்பற்றியும் எனது ஆற்றலைப் பற்றியும் அதிக நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை அனைவரும் அறிவர் பல சந்தர்ப்பங்களில் என்னைப்பற்றி அவர் ஜனாதிபதி அவர்கட்கும் கூறியுள்ளார். ஜெனரல் ரஞ்சன் விஜயரட்ன

நன்றி - நூலகத்திட்டம்



அவர்கள் என்மீது வைத்திருந்த நம்பிக்கை காரணமாக ஜனாதிபதி திரு. பிரேமதாச அவர்கள் என்மீது கொண்ட விசுவாசம் பெரிதும் அதிகரித்தது. திடீரென என்னைக் கட்டாய லீவில் அனுப்பும்வரை ஜனாதிபதி அவர்கள் என்னோடு உரையாடிய உரையும், உபசரிப்புகளும் இதறகுச் சான்று பகர்கின்றன. திரு. பிரேமதாஸ அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்று 1990 யூன் மாதம் கியங்கணையில் நடைபெற்ற கம்உதாவ நிகழ்ச்சிகளின்போது என் நடவடிக்கைகளை பகிரங்கமாகப் பாராட்டி உரை நிகழ்த்தினார். பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்கிய மைக்காக நான் விசேடமாக பாராட்டப்பட்டேன். அன்றைய பத்திரிகைகள் இதுபற்றி வெளியிட்ட அறிக்கைகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

கம்பஹா முக்கிய கல்லூரி ஒன்றில் சேவை யாற்றிய எனது மனைவிக்கு வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் பதவிநிலை பதவி ஒன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி அவர்கள் நடவடிக்கை எடுத்தார். அதே சமயம் அங்கு செல்வதற்கும், திரும்பி வருவதற்கும் மேற்படி தூதரகத்துடன் தொடர்பு கொள்வதற்கும் 1990–1991 காலகட்டத்தில் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் வாழ்வுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய ஜே.வி.பி.யின் பயங்கரவாதத்தை நசுக்க 1985–91 காலகட்டத்தில் என்னால் ஆற்றப்பட்ட சேவைபற்றி ஜனாதிபதி நன்கு அறிந்து இருந்தார். அதேபோல் தென்பிராந்தியத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர்

முறையில் தானே மேற்கொண்டுள்ளார் என்பதை நம்பத் தகுந்த காரணங்கள் எனக்குண்டு. அதேசமயம் 1992 ஜன்வரி 19ம் திகதி ஞாயிறு ஒப்சேவரில் குறிப்பிடப்பட்டு உள்ள காரணங்களை அடிப்படையாக வைத்து மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் கீழ்வரும் விடயங்களை முன்வைத்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்றும் நான் நம்புகின்றேன்.

கொழும்பு மாவட்டத்திலும் குறிப்பாக நீர்கொழும்பு பிரதேசங்களிலும் சட்டவிரோதமாக போதைப்பொருள் உட்பட்ட குடிவகைகள் உற்பத்தி செய்யப்படும் பல இடங்கள் சுற்றி வளைக்கப்பட்டன. ஜனாதிபதி அவர்களுக்கு நெருங்கியவர்களும், உயர்மட்ட வர்த்தகர்களும், சில அமைச்சர்களும் அரச கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த முற்றுகைகளையும், விசாரணைகளையும் கடுமையாக எதிர்த்தனர். அரச கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதை நிறுத்தி விடுவதாகவும் எதிர்வரும் பொதுத் தேர்வுகளில் நிதியுதவி செய்யமாட்டோம் எனவும் இவ்வர்த்தகர்களும் பிரமுகர்களும் அறிவித்து உள்ளனர்.

மேற்படி முற்றுகைகளும், விசாரணைகளும் அவற்றுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட முறையீடுகளும் ஆர்ப்பாட்டங்களும் இந்நாட்களில் வெளியான பத்திரிகைகளில் பிரசுரமாயின. எனது தலைமையின் கீழ் செயற்பட்ட விசேட நடவடிக்கைச் செயலணியின் செயற்பாடுகளின் விளைவாக ஜனாதிபதி அவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அரச கட்சிப் பாராளுமன்ற

# யார் பக்கம்?

ான்ற வகையிலும் வடமேல் மத்திய மாகாணங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்ற வகையிலும் நான் செய்த பணிகளை சனாதிபதி அவர்கள் நன்கு அறிந்து இருந்தார். அதே சமயம் 1988 யூலை 24ம் திகதி காலி உழுபிட்டிகே கிராமத்தில் அமைந்து இருந்த என் பாரம்பரிய வீட்டைத் தாக்கிய பயங்கரவாதிகள் எனது வயது முதிர்ந்த தாயையும், (77) எனது சகோதரரையும் இரண்டு பிள்ளைகளையும் (5,2) எனது மைத்துனியையும் படுகொலை செய்து சுட்டு எரித்ததையும் ஜனாதிபதி அவர்கள் நன்கு அறிவார்.

ஜன...திபதி அவர்கள் பதவி ஏற்றநாளைக் கொண்டாடும் நிகழ்ச்சி 1992 ஜனவரி 3ம் திகதி கண்டி தலதா மாளிகையில் முடிவுற்ற பின் கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா ங்களாவில் பகற்போசன விருந்து ஒன்று நடைபெற்றது. வேறு சிலருடன் விசேட விருந்தினராக நானும் அங்கு அழைக்கப்பட்டேன். அங்கு வருகை தந்திருந்த சிலர் பின்வருமாறு: பேராசிரியர் றால் ..... ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ண.... பேராசிரியர் சி....... திரு றொ........... (ஜே.வி.பி. ஆயுதப் போராட்டம் என்ற நூலின் ஆசிரியர்). இந்த வைபவத்தின் போது ஜனாதிபதி அவர்கள் என்னுடன் மிகநெருக்கமாக உரை யாடினார். ஆனால் இத்தகைய எந்த சந்தர்ப்பத்திலும் எனது சேவை நீடிக்கப்படமாட்டாது என்றோ அல்லது நான் கட்டாய லீவில் அனுப்பப்படுவேன் என்றோ எது விதத்திலும் குறிப்பிடவில்லை.

1992 ஜனவரி 7ம் திகதி "ஜனதா" பத்திரிகையின் (ஞாயிறு ஒப்சேவர் போன்றே அரசாங்க நிர்வாகத்தின் கீழ் வெளியிடப்படும் பத்திரிகை) முதற் பக்கத்தில் வெளிவந்த செய்தித் தலைப்பில் விசேட நடவடிக்கைச் செயலணியை கூடுதலாக குற்ற நடவடிக்கைகள் செய்யப்படும் கிராமப்புறங்களுக்கு விசாலிப்பதாக கருத்து வெளியிடப்பட்டு இருந்தது. கொழும்பு கவர் வீதியில் விசேட நடவடிக்கை செயலணி தலைமையக பிரதி பொலிஸ் மா அதிபர் ...டுகம்பொல அவர்களின் தலைமையின் கீழ் விசேட நடவடிக்கை அலுவலகத்தின் முதலாவது நிறைவாண்டு விழா ஜனவரி 17ம் திகதி நடைபெறுவதாகவும் 16ம் திகதி இரவு பூராகவும் பிரித் ஓதும் வைபவம் நடைபெறும் எனவும் 17ம் திகதி மகாசங்கத்தினருக்கு தானம் வழங்கப்படும் எனவும் அப்பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டு இருந்தது.

எனவே நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல என்னைக் கட்டாய லீவில் வெளியேற்றும் தீர்மானத்தை ஜனாதிபதி அவர்கள் தனிப்பட்ட

உறுப்பினர்களுக்கும் ஏனையோருக்கும் ஏற்பட இருந்த அரசியல் பிரச்சினைகளை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டும் சில பத்திரிகைக் கட்டுரைகளின் போட்டோப் பிரதிகளை பின்னிணைப்பு 2 என்று குறிப்பிட்டு நான் சமர்ப்பித்திருக்கின்றேன்.

1991 மே மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதி அவர்கள் என்னை அவரது சுச்சரித இல்லத்துக்கு அழைத்து யு.என்.பி.ஆதரவாளர்களோ யு.என்.பி யினரோ அல்லது கட்சிக்கு நிதியுதவி வழங்குபவர்கள் தொடர்பாகவோ செய்யும் முற்றுகைகளை கைவிடுமாறு அல்லது குறைக்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். உள்ளூராட்சி தேர்தல்கள் முடியும்வரை அரசியல் ஆதரவாளர்கள் தொடர்பான முற்றுகைகள் பற்றி சிரேஷ்ட அமைச்சர்கள், எம்.பி.க்கள் செய்யும் கோரிக்கைகளுக்கு செவிமடுக்குமாறு ஜனாதிபதி எனக்கு அறிவித்தார். இத்தகைய முற்றுகைகள், விசாரணை பற்றிய அறிக்கைகளை தனக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி அவர்கள் அறிவித்தார்கள். ஜனாதிபதியின் இந்தக் கட்டளைக்கு நான் உடன்படுவதைத் தவிர வேறு ஒன்றையும் நான் செய்ய முடியவில்லை. இக் கோரிக்கை காரணமாக உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் விசேட நடவடிக்கைச் செயலணியின் செயற்பாடுகளை குறைப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

எனது தலைமையின் கீழ் இயங்கிய விசேட நடவடிக்கைச் செயலணியின் செயற்பாடுகள் காரணமாக ஜனாதிபதியும் அரசும் முகம் கொடுத்த பல்வேறு இடர்களை நான் கீழே குறிப்பிடுறேன்.

ஜோசிம் கசினோ அரசனின் கசினோ சூதாட்டங்கள் நடைபெற்ற இடங்களையும், அவை பற்றிய முற்றுகைகள், விசாரணைகள் பற்றிய தகவல்களை வேறொரு சத்தியக் கடுதாசியில் குறிப்பிட்டுள்ளேன். லெ... ... ... என்னும் வர்த்தக நிறுவனத்தை முற்றுகையிட்ட காரணத்தால் பொலிஸ் திணைக்களத்தின் உயர்மட்டங்களில் இடம்பெற்ற பல ஊழல்கள் அம்பலமாகின.

"க...................... கிளப்", "..............கிளப்", என்னும் பெயர்களில் கசினோ சூதாட்ட நிலையங்கள் இரண்டை உள்ளடக்கிய லெ........ லிமிடெட் நிறுவனம் கொரியா, சிங்கப்பூர் வர்த்தகர்களால் உருவாக்கப்பட்ட பின்னர் இவற்றின் முகாமைத்துவ நட வடிக்கைகளுக்கு இலங்கையர் ஈடுபடுத்தப் பட்டனர்.

1991 மார்ச்சில் இந்நிறுவனங்கள் முற்றுகையிடப்பட்ட போது இந்த கசினோ மத்திய நிலையங்கள் இரண்டில் இருந்தும் உயர்மட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சன்மானங்களையும், பரிசில்களையும் பெற்றார்கள் என்பதும் அம்பலமாகியது. அம்பலப்படுத்தப்பட்ட தகவல்களிலிருந்து உயர்மட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களான பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. க......... , சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் திரு. றொ........, சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் திரு. லா.... சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் திரு. ஹெ....... என்போர் கசினோ நிலையங்களிலிருந்து சன்மானம் பெற்ற சிலராவர். இந்த முற்றுகைகளின் போது அம்பலமான உயர்மட்ட ஊழல்களின் பாரதூரமான தன்மை காரணமாக இவை பற்றி முழுமையான எழுத்துமூல அறிக்கையை 1991 ஏப்ரல் 10ம் திகதி நான் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்தேன். ஆனால் மேற்படி அறிக்கை சம்பந்தமாகவோ அதனோடு தொடர்பான சம்பவங்கள் தொடர்பாகவோ எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக நானறியேன். இவ்விசாரணை பற்றிய விபரங்களை நான் வேறொரு சத்தியக் கடுதாசி மூலம் சமர்ப்பித்துள்ளேன்.

மறைந்த ஜெனரல் ரஞ்சன் விஜயரட்னவின் பணிப்புரைக்கமைய கொழும்பு நூ......... அன் கம்பனி என்ற நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தரான திரு. எம்.ஏ.ஹ.......... என்பவர் போதைப்பொருள், வெடிகலன்கள் என்பவற்றோடு தொடர்புடைய கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார், எனவும் விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு உதவுகிறார் எனவும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி நான் விசாரணை நடத்தினேன். பாரதூரமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டமையால் இந்நிறுவனத்தை முற்றுகையிட்டு பல வெடிகலன்களையும் உபகரணங்களையும் கைப்பற்றினேன். குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படும் 107 வகையான பொருட்கள், அலுமினியம், பவுடர், பிறிமியம் டிற்றோற்றவர் வயர், பியுஸ்கோல்ட், டில்பிறிட்ஸ் என்பன பாரிய அளவில் கைப்பற்றப்பட்டன. இந்த விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் திரு. எம்.டி. வ..... என்பவர் உப பொலிஸ் அதிபருக்கு லஞ்சம் வழங்க இந்நிறுவனத்தின் ஊடாக முயற்சி செய்தார். இம்முயற்சி தொடர்பாக மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் லஞ்ச ஆணையாளருக்கு அறிவித்ததன் காரணமாக மேற்படி லஞ்ச வழக்கு தற்போது நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறது.

இந்த வெடிகலன்கள் கைப்பற்றப்பட்ட சமயத்தில் தற்போதைய பொலிஸ் மா அதிபரும் குற்றஞ்சுமத்தப்பட்ட முக்கியஸ்தரான திரு. எம்.ஏ. ஹ..... வும் ஒரே நேரத்தில் ஒரே வெளிநாட்டில் காணப்பட்டனர், என்றும் விசாரணைகளின் போது அம்பலமானது. பொலிஸ் மா அதிபருக்கு லஞ்சம் வழங்க மேற்குறிப்பிட்ட திரு ஹ... கொழும்பு வங்கியொன்றிலிருந்து 500,000 ரூபா பெற்றுக்கொண்டதும் அம்பலமாகியது. இந்த விசாரணைகளின் போது பொலிஸ் மா அதிபர் தனிப்பட்ட முறையில் நேரடியாகவே தலையிட்டுள்ளார் என்றும் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக நான். விசாரணையை ஆரம்பித்த பின்னர் இதனோடு தொடர்பு கொண்ட ஜெனரல் திரு ரஞ்சன் விஜயரட்ன 1991 மே 1இல் கொழும்பு 5 ஹவ்லொக் வீதியில் குண்டு வெடிப்புக்கு இலக்காகி படுகொலை செய்யப்பட்டார் என்பதைக் குறிப்பிட வேண்டும். இதுபற்றிய முழுமையான அறிக்கையை ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்தேன். நான் அறிந்த மட்டில் இவ் அறிக்கைசம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்க பணிப்புரையும் வழங்கப்படவில்லை.

இது விடயம் தொடர்பான கோப்பு (B.S.O/ C.R./ 598/91) ஜெனரல் திரு ரஞ்சன் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட போது அவரது வீட்டில் இருந்தது. ஆனால் அக் கோப்பு தற்போது அங்கு இல்லையென நான் அறிகிறேன். திரு ரஞ்சனின் படுகொலை தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்த ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமிக்குமாறு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கோரிய போதும் அரசாங்கம் அதற்கு செவிமடுக்கவில்லை.

நான் குறிப்பிட்ட மேற்படி விசாரணையோடு திரு ரஞ்சன் அவர்களின் கொலை நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது என நான் கருதுகிறேன்.

ஜே.வி.பி.பயங்கரவாதத்தை நசுக்குவதே அவரோடு நான் கொண்டிருந்த நெருக்கமான உறவுகளுக்கு காரணம். பயங்கரவாதத்தை நசுக்குவதற்கு அவர் வழங்கிய தலைமைத்துவமும் நாட்டிற்காக அவர் செய்த அர்ப்பணிப்புகள் காரணமாகவும் அவர்மீது எனக்கு அபாரமான அன்பு உண்டு. எனவே திரு விஜேரட்ன அவர்களை யார் எதற்காக கொலை செய்தார்கள் என்பதனை அறிய பேரவாக் கொண்டேன். திரு விஜயரட்ன அவர்களை படுகொலை செய்தது சம்பந்தமாக ஒரு பரந்துபட்ட விசாரணையை மேற்கொள்ள விசேட நடவடிக்கை செயலணியின் கீழ் எனக்கு அங்கீகாரம் வழங்குமாறு நான் ஜனாதிபதி அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டுகோள் விடுத்தேன். இது பற்றி சிந்தித்து பின்னர் அறிவிப்பதாக ஜனாதிபதி அவர்கள் ஆரம்பத்தில் எனக்குக் கூறினாலும் இரண்டாவது தடவை இதுபற்றி நான் நினைவு படுத்திய போதும் எனது வேண்டுகோளுக்கு ஜனாதிபதி அவர்கள் அவ்வளவு அக்கறை வெலுத்தவில்லை.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் நெருக்கமாக கடமை ஆற்றிய, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது அவர்களின் தந்திரோபாயங்களை நன்கு அறிந்த சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் என்ற வகையில் முழு நாட்டின் வேண்டுகோளுக்கமைய திரு ரஞ்சனின் மரணம் தொடர்பான விரிவான விசாரணை செய்வதற்கான ஆற்றல் விசேட நடவடிக்கை செயலணிக்கு உண்டு என்பது எனது நமபிக்கை ஆகும். இன்றுவரை திரு விஜயரடனவின் மரணத்துக்கான காரணம் அம்பலப்படாமை பெரும் கவலைக்குரியது.

இந்தப் படுகொலை சம்பந்தமான விசாரணையை மேற்கொள்வதற்கு இருமுறை அவரிடம் நான் அனுமதி கோரியதன் காணமாக ஜனாதிபதி அவர்கள் கோபமடைந்துள்ளார்கள், என்பது எனது கருத்தாகும். நூ...வின் ஆயுத விற்பனையும் (இரகசிய) வெடிகலன் பற்றிய கண்டுபிடிப்புக்களும் பற்றி என்னால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளும் திரு விஜயரட்னவின் அகால மரணத்தோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு கொண்டுள்ளன என்பது பற்றித் தகவல்களை அம்பலப்படுத்தும் மற்றும், ஓர் சத்தியக் கடுதாசிக்கு நான் கையெழுத்திட்டுள்ளேன்.

விபச்சார விடுதிகள், மோசடி நடக்கும் வாடிவீடுகள் பற்றி விசேட நடவடிக்கைச் செயலணி செய்த முற்றுகைகளின் காரணமாக மேற்படி செயலணிக்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இவற்றுள் சில நிறுவனங்களை அரசாங்க கட்சியைச் சார்ந்த அரசியல்வாதிகள் நடத்தி வந்தனர், அல்லது அரசாங்க கட்சியின் அரசியல் ஆதரவாளர்களாகிய உள் ாட்டு முதலாளிகள் நடத்தி வந்தனர். விபச்சார ிடுதிகள் உயர்மட்ட அரசியல் பதவிகளுக் நெருக்கமான நபர்களினால் நடாத்தப்பட தாப்பங்களும் உ ள.

பார்க்க பக்கம் 09



நன்றி - நூலகத்திட்டம்



இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கு முன்வருமாறு இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வுக்கு எதிராக சிங்களப் பேரினவாதம் மறுபடியும் கிளர்ந்தெழுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்மையில் பல பத்தாயிரம் முஸ்லிம்கள் பலாத்காரமாக அவர்களது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு, வடக்கிலிருந்தே முற்றாக விரட்டியடிக்கப் பட்டுள்ளார்கள் கிழக்கிலே பலநூறுபேர் கொல்லப்பட்டுள்ளார்கள். மாணவர் தலைவர்கள் பெண்ணுரிமைவாதிகள், மனித உரிமைவாதிகள் போன்றோரைச் சிறையிட்டமை, கொன்றமை போன்றவற்றிற்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பாவர். ஈழ மக்கள் வடக்கு கிழக்கில் பல சந்ததிகளாக வாழ்ந்துவந்த முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் வெளியேற்றுகிற ஒன்றாகப் போயிற்று? தமிழ் தேசியவாத இயக்கம் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நலன்களையும் பிரதிபலிக்கின்றனவா அல்லது இவை வெறும் யாழ்ப்பாணத் தலைமைத்துவத்தின் விருப்பத்தை மட்டுமே பிரதிபலிக்கின்றனவா? "தாழ்த்தப்பட்ட" மக்களையோ, பெண்களையோ அவர்களின் நலன்களையோ ஏன் தமிழ்த்தேசியவாத மற்றும் எரிபொருளை வழங்குதலுக்கு வசதி செய்யுமாறு இரு பகுதியினரிடமும் நாம் வலியுறுத்துகிறோம்.

வடக்கு கிழக்கின் சிவில் அமைப்புக்களையும், பிரசித்தி பெற்ற தமிழ் தனி நபர்களை பார்வையாளர்களாகவும் பேச்சுவார்த்தையில் பங்கேற்பவர்களாகவும் அங்கீகரிக்க வேண்டுமென நாம் பரிந்துரைக்கின்றோம்.. தமிழ் மக்களுக்குப் பிராந்திய சுயாட்சி மாணவர் அமைப்புத் தலைவர்கள் போன்றோரையும் நாம் பரிந்துரை செய்கின்றோம்.

ஒரு சமரசத்திற்கு வருவதற்கு ஐ.நா.வின் மத்திய ஸ்தத்தை அங்கீகரிக்குமாறு புலிகளையும் அரசையும் நாம் கோருகிறோம். ஐ.நா. வானது மீளவும் ஒருதடவை வன்முறையைக் கைவிட்டு நலலெண்ணத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு ஏற்ற

# "இராணுவத் தீர்வு ஒரு போதும் சாத்தியமில்லை"

## இலங்கை அரசு மற்றும் தமிழ் அரசியல் கட்சிகள் நிறுவனங்கள் அனைத்திற்கும் ஒரு திறந்த கடிதம்

தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவம் செய்கிற தமிழ் சிவில் அமைப்புக்களையும் பேச்சுவார்த்தையில் பங்கேறகச் செய்யும் விதத்தில் பேச்சுவார்த்தைக்கான ஒழுங்குகளை மேலும் விரிவு படுத்துமாறு நாம் கோருகின்றோம்.

கடந்த ஒரு தசாப்தமாக நீடிக்கும் இந்த யுத்தத்தினால் தமிழர்கள் பட்ட துன்பங்கள் சொல்லுந்தரமற்றவை. இலங்கையின் பாதுகாப்புப் படையினரால் பல பத்தாயிரம் தமிழர்கள் கொல்லப் பட்டுள்ளார்கள்; சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டு உள்ளார்கள்; பல லட்சக்கணக்கானோர் வீடு வாசல்களைவிட்டு வெளியேறியுள்ளனர். வடக்கு கிழக்கின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமாகச் சீரழிந்துள்ளது. அடிப்படையான உணவுப்பொருட்கள், மருந்து வகைகள், மின்சாரம், போக்குவரத்து வசதி என்பனவற்றின் பற்றாக்குறை படுமோசமாக நிலவுகிறது. அதிகரித்துவரும் பெண் அகதிகளின் தொகையும், குழந்தைகளதும் பெண்களதும் இறப்புவீத அதிகரிப்பும், பெண்களும் குழந்தைகளும் இந்த யுத்தத்தால் அனுபவிக்கும் பெரும் துன்பத்திற்கு சரியான சான்றுகளாகும். தமிழர்கள் தங்களது ஒரு இளம் சந்ததியை முற்றாக இழந்துள்ளனர். ஒன்றில் வன்முறையின் பலிக்கடாக்களாக; அல்லது வன்முறையின் பங்காளிகளாக.

புலிகளின் ஆயுதமேந்திய பதிலடியோ, அப்பாவிச் சிங்கள மக்களைப் படுகொலை செய்வது, கைதிகளை சித்திரவதை செய்வது கொல்வது என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF),தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)போன்ற பிற தமிழ் அரசியல் அமைப்புகளும் பழிவாங்கும் அரசியல் பிழைப்பில் தம் பங்குக்கு ஈடுபட்டதன் மூலம் வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தைச் சிதைப்பதற்கு பங்காளிகளாகியுள்ளனர்.

மேலும், தமிழ் சமூகத்தின் முக்கியமான பிரிவொன்று தனது சமூக- பொருளாதார நிலையில் முன்னேற முடியாத விதத்தில் சாதிய ஒடுக்கு முறை இன்னமும் ஒரு தடையாக இருந்துவருகிறது. பெண்களின் உரிமைகட்காகவோ யுத்தத்திற்கு எதிராகவோ செயற்பட சுதந்திரமாக தம்மை ஒழுங்கமைத்துக்கொண்ட தமிழ்ப் பெண்கள் ஒடுக்கப்பட்டனர். தமிழ்த் தேசியவாதத்தின் "வெளியார்களை" ஒதுக்கும் அடிப்படையானது முஸ்லிம் விரோதப் போக்குடையதாகவும், தமிழ் முஸ்லிம் உறவில் பிளவை ஏற்படுத்த வழிவகுப்பதாயும், வடக்கு கிழக்கில் சமாதானத்தை கொண்டுவருவதிலுள்ள சிக்கல்களை மேலும் மோசமடையச் செய்வதாயும் உள்ளது. இறுதியாக, சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் மீது காட்டும் கருணையானது தமிழ் தேசியவாத இயக்கத்தின் இராணுவவாதத்தால் சிதைக்கப்பட்டுள்ளது.

சிங்களப் பேரின வாதத்திற்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் பதில் நடவடிக்கையின் தண்மை தமிழ் தேசியவாதம் குறித்த பல சந்தேகங்களை இப்போது எழுப்பியுள்ளது. தமிழ் தேசியவாதம் எப்படி அதன் வளர்ச்சிப்போக்கில் வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம்களிடமிருந்து அந்நியமாயிற்று? பாரம்பரிய தாயகக் கோரிக்கை, ஏன் இயக்கம் பிரதிநிதித்துவம் செய்யாமல் உள்ளது.

இன்று வடக்கு கிழக்கு ஒரு வெற்று பூமி. ஆயுத படையினரால் நாசமாக்கப் பட்டும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மாற்று அரசியற் குரல்கள் மீதான ஒடுக்கு முறையால் மௌனமாக்கப் பட்டும் உள்ளது.

நாம் தரும் பரிந்துரைகள் பின்வருமாறு:

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசும் தமது சண்டையை நிறுத்த வேண்டும் என்றும் , அரசியற் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் நாம் கோருகிறோம்.

வடக்கு கிழக்குககு உணவு அனுப்புதல், மருந்துப்பொருட்கள் யொன்றை வழங்க மறுத்துவரும் அரசின் போக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமரசத்திற்குத் தயாரற்ற போக்கும் இன்று இந்த சிவில் யுத்தத்தை தொடரவைத்துக் கொண்டுள்ளது. ஆகவே, பிற தமிழ் அமைப்புக்களதும் தனிநபர்களதும் பங்களிப்பு ஒரு அமைதியான தீர்வுக்கு அவசியம் என்று கருதுகிறோம்.

சிவில் அமைப்புக்கள் என்று நாம் சொல்லுகையில் அன்னையர் முன்னணி, மட்டக்களப்பு அமைதிக்குழு (Peace Committee) போன்ற வற்றையும் மற்றும் பிரசித்தி பெற்ற தனிநபர்கள் என்கையில் மட்டக்களப்பு யாழ்ப்பாண ஆயர்கள் மட்டக்களப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், தொழில் வல்லுநர்கள், தொழிற்சங்கவாதிகள், மனித உரிமைவாதிகள், பெண்கள் மற்றும் விதத்தில் ஒரு நடுநிலையான செல்வாக் குமிக்க மத்தியஸ்தராக விளங்கும். நாம் இப்பிரச்சினைக்கு ஒரு இராணுவ தீர்வு சாத்தியமில்லை என்று உறுதியாக நம்புகிறோம் அத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவினரும, அனைத்து இன சமூகங்களுக்கும் மதிப்பளிக்கும் ஒரு சமஸ்டி ஆட்சி முறையினை உருவாக்குகிற அரசியல் தீர்வுக்கு உடன்பட்டுவர மனப்பூர்வமாகச் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறோம்.


இந்தத் திறந்த கடிதத்தில் அமெரிக்காவினதும் கனடா வினதும் பிரசித்திபெற்ற பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பதினெட்டுப் புலமையாளர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். அவர்களுடைய விவரம் கீழே தரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. பேராசிரியர். ஜே.எம். அமிர்தநாயகம் | - | சமூக ஆய்விற்கான புதிய கல்லூரி,நியூயோர்க் |
| 2. பேராசிரியர்.ஜீ. ஆனந்தலிங்கம் | - | பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம். |
| 3. பேராசிரியர்.ஆர். சார்லஸ் | - | மக்மாஸ்ரர் பல்கலைக்கழகம், கனடா. |
| 4. பேராசிரியர். ஈ. வலன்ரைன் டானியல் | - | மிச்சிக்கன் பல்கலைக்கழகம். |
| 5. பேராசிரியர் சாந்தா தேவராஜன் | - | ஹாவார்ட் பல்கலைக்கழகம். |
| 6. பேராசிரியர் ஜீவன் ஹூல் | - | ஹங்வி மட் கல்லூரி, கலிபோர்னியா. |
| 7. கலாநிதி எஸ். கேசவநாதன் | - | ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகம் |
| 8. திரு.எம். குகானந்தா | - | வடக்கு கரோலினா அரச பலகலைக்கழகம். |
| 9. திரு. ராம் மாணிக்கலிங்கம் | - | மஸச்சூசெற்ஸ் தொழில்நுட்பக் கல்லூரி |
| 10. திரு. ஆர். நோயல் | - | மக் மாஸ்ரர் பல்கலைக்கழகம்-கனடா. |
| 11. கலாநிதி. எஸ். பத்மநாதன் | - | மேரிலாண்ட் பல்கலைக்கழகம். |
| 12. பேராசிரியர். சித்தார்த்தன் பேரின்பநாயகம் | - | ஹண்டர் கல்லூரி - நியூயோர்க |
| 13. திரு.ஆர். ராஜமோகன் | - | மக் மாஸ்ரர் பல்கலைக்கழகம்-கனடா. |
| 14. பேராசிரியர். லக்ஷ்மணன் சபாரத்தினம் | - | டேவிட்சன் கல்லூரி,வடக்குக் கரோலினா |
| 15. பேராசிரியர்.கே.சஞ்சயன் | - | வடக்குக் கிழக்குப் பல்கலைக்கழகம்-மஸச்சூசெற்ஸ் |
| 16. திரு.எஸ். சுபத்ரா | - | பிரௌண் பல்கலைக்கழகம் |
| 17. திரு.எம். சுதர்ஷன் | - | மஸச்சூசெற்ஸ் பல்கலைக்கழகம். |
| 18. பேராசிரியர். எஸ்.ஜே தம்பையா | - | ஹாவார்ட் பல்கலைக்கழகம் |


# ஒன்பது மாதங்களாகத் தடுப்பு



திரு. பெ. சந்திரசேகரன்



திரு. பீ.ஏ. காதர்



திரு. வீ.ரீ. தர்மலிங்கம்

கடந்த ஒன்பது மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மலையக மக்கள் முன்னணித் தலைவர்களான பெ.சந்திரசேகரன், பீ.ஏ. காதர், வி.ரீ. தர்மலிங்கம் ஆகியோர் குறித்த ஆட்கொணர்வு மனு மே மாதம் நாலாம் திகதி விசாரணைக கெடுக்கப்பட்டுள்ளது.

எவவித குற்றச்சாட்டுகளும் இதுவரை சுமத்தப்படாத நிலையில் மேற்படி தலைவர்கள் சார்பில் கொண்டுவரப்பட்ட ஆட்கொணர்வு மனு மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் உயர் நீதிமன்றத்துக்கு அடிப்படை உரிமைகள் மீறல் என்ற அடிப்படையில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

திருவாளர்கள் பெ.சந்திரசேகரன், பீ.ஏ. காதர், வி.ரீ. தர்மலிங்கம் ஆகியோர் 'விசாரணைகளின் போது சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கின்ற அதேவேளை பிரபல தொழிற்சங்க மொன்றின் தலைவரொருவரின் நெருங்கிய உறவினரொருவரும் 'பிரச்சினை'யில் தொடர்புற்றிருப்பதாக மலையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிந்திய செய்தியின் படி இம்மூவரையும் கைது செய்து தடுத்து வைத்திருப்பது சட்ட விரோதமானதென்றும், இம் மாதம் 18ம் திகதி குற்றப்பத்திரிகை கையளிக்கப்படாத பட்சத்தில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

**யஸீர் அர.ஃ.பாத்தின் தலைமையை எல்லாப் பலஸ்தீனக் குழுக்களுமே ஏற்றுக்கொள்கிறார்கள் என்று சொல்லலாமா?**

அர.ஃ.பாத்தின் தலைமையை எல்லாக் குழுக்களும ஏற்றுக்கொள்கிறார்களா என்பதல்ல பிரச்சினை. இன்றைய நிலையில் அனைத்துப் பலஸ்தீனக் குழுக்களையும் ஒன்றிணைக்கும் ஒரு சக்தியாகவே அவர் இருக்கிறார். அவரைவிட்டால் சந்தர்ப்பங்களில் அநியாயங்கள் நடந்து விடுகின்றன. எனினும் ஒன்றை மட்டும் நான் சொல்ல முயும். மாற்றுக்கருத்துக்களை வைத்திருக்கிறார்கள் என்பதற்காகவோ அலலது பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வழிமுறைகளை கருத்துரீதியாக நிராகரிக்கிறார்கள் என்பதற்காகவோ எவரையோ அல்லது எந்த இயக்கத்தையோ நாங்கள் திட்டமிட்டு அழித்தொழிக்கவில்லை. நிச்சயமாக உங்களுடைய

**சாத்தியங்களில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?**

அமெரிக்க- சோவியத் வல்லரசு மோதல் நிலை இல்லாமல் போன பிற்பாடு கேள்வி முறையற்றவகையில் அமெரிக்கா உலக மேலாட்சிக்கு வந்துள்ளது. அமெரிக்க நலன்களும் மேற்குலக நலன்களும் முன்னெப்போதுமில்லாத வகையில் பேணப்படும் எனினும் அமெரிக்கா ஆதாவானவர்கள் என்பதால் எங்களுடைய நிலை சங்கடமானது.

பலஸ்தீனம் எப்போதும் மனித விழுமியங்களையும் எல்லா மதச் சுதந்திரங்களையும் பேணும் ஒரு நாடாகவே இருக்கும். எங்களுடைய முக்கியமான பிரதிநிதிகளில் பலா பலஸ்தீனக் கிறித்தவர்கள் என்பதை உலகம் அறியும். வெறும் பெயருக்காக

*பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கியமான தலைவர்களிலொருவரை சரிநிகரின் ஐரோப்பா நிருபர் சந்தித்தார். இஸ்ரவேல் உளவுப்படையான மொஸாட்டினால் எந்தக் கணமும் துப்பாக்கிக் குண்டை எதிர்பார்த்தபடி, ஆனால் அதற்குத் தயாராகவும் இருக்கும் திரு. வாலித் அவர்கள் தனது நாற்பத்தைந்து வருட வாழ்வில் அடக்குமுறையையும் போராட்டத்தையும் எதிர்ப்பையும் அனுபவித்துள்ளதாகச் சொல்கிறார்.*

*அறிவும் அனுபவமும் அற்புதமான ஆங்கில, பிரஞ்சு மொழி அறிவும் அனுபவமும் வாய்க்கப்பெற்ற வாலித அவர்கள் பலஸ்தீன விடுதலையின் மையம், பலஸ்தீன மக்களை மனிதர்களாகப் பேணுவதே ஆகும் என்று அமைதியாகக் கூறுகிறார்.*

*பேட்டியின் முக்கியமான அம்சங்களைக் கீழே தருகிறோம்.*

# "தமிழ் இயக்கங்கள் போல நாங்கள் கொல்வதில்லை !"

## -பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்

பொறுப்புணர்வும், ஏனையோரின் அபிப்பிராயங்களையும் கேட்கக்கூடிய தன்மையும், ஜனநாயக உணர்வுமுள்ள தலைவர்களை உடனடியாகக் கண்டுபிடிப்பது சிரமம்.

காஸா மற்றும் மேற்குக் கரைப் பிரதேசங்களில் 'இன்ரி.ஃ.படா' எழுச்சிக்குப் பிற்பாடு புதிய தலைமைத்துவம் ஒன்று எழுச்சி பெற்றுள்ளதைக் காண முடிகிறது. இந்தத் தலைமை முற்றாக மேலோங்கிவர சற்றுக் காலம் எடுக்கும்.

**கண்மூடித்தனமான வன்முறையிலும் இயக்கத்துக்குள்ளேயே படுகொலைகளிலும் பலஸ்தீன விடுதலை இயக்கம் ஈடுபட்டுள்ளது என்பதைப் பற்றி என்ன சொல்வீர்கள்?**

கண்மூடித்தனமான வன்முறையைப் பற்றி நீங்கள் இஸ்ரவேலிடம் கேளுங்கள். இயக்கப் படுகொலைகளைப் பொறுத்தவரை அவற்றை நியாயப்படுத்த நான் விரும்பவில்லை. இந்த வகையான போராட்டங்களுக்குள் பல தமிழ் விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த மாதிரி நூற்றுக்கணக்கில் இயக்கங்களுக் குள்ளேயும் வெளியேயும் நாங்கள் கொன்று குவிக்கவில்லை.

**பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குள் ஜனநாயக மத்தியத்துவம் இருக்கிறதா?**

உண்மையில் பலஸ்தீன விடுதலை இயக்கம என்பதே ஒரு பெரிய ஐக்கிய முன்னணி. முடிவு எடுக்கும் பொறுப்பும் அதிகாரமும பலஸ்தீன தேசிய அவைக்கு (Palastinian National Council - PNC ) உரியது. இந்த அவையில் அனைத்து விடுதலை இயக்கங்களும் வேறு மக்கள் நிறுவனங்களும் அங்கம் வகிக்கின்றன. பலஸ்தீனவிடுதலை இயக்கம் என்பது ஒரு யஸீர் அர.ஃ.பாத்தினதோ அல்லது வேறெந்தத் தனிநபரது முடிவிலோ தங்கியிருக்கவில்லை.அது ஒரு கூட்டமைப்பு.

**சோவியத் யூனியனது உடைவு மற்றும் வளைகுடா யுத்தம் ஆகியவற்றின் பிற்பாடு பலஸ்தீன மக்களின் விடுதலைக்கான** ஓரளவிற்காவது ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளின் அபிப்பிராயத்தையும் செவிமடுக்க வேண்டியுள்ளது. மேற்குலகின் சமூக ஜனநாயக அரசாங்கங்களை எப்படி நாம் வென்றெடுக்கப் போகிறோம் என்பதும், தளத்தில் எவ்வளவு தூரம் யதார்த்தமாகச் செயல்படுகிறோம் என்பதிலும்தான் எமது விடுதலை தங்கியுள்ளது. மாறிவரும் சர்வதேச சூழலைப் புரிந்துகொண்டு இணக்கப்பாடு, இறைமை என்ற விடயங்களை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்.

**வளர்ச்சியடைந்துவரும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை எப்படி அணுகுகின்றீர்கள்?**

இது ஒரு முக்கியமான விடயம். நாங்கள் எப்போதுமே தீவிர மதவெறியர்களாகவோ அடிப்படை வாதிகளாகவோ இருந்ததில்லை. இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் வளர்ச்சி என்று நீங்கள் சொல்வதை இஸ்லாமியப் புரட்சியின் எழுச்சியென்று வேறுசிலர் கூறுவார்கள். இவர்கள் அனைவருமே பலஸ்தீன விடுதலைக்கு நாங்கள் அவர்களை வைத்திருக்க வில்லை. நீண்ட காலப் போராட்டத்தினூடே அவர்களும் பலஸ்தீனம், பலஸ்தீனியாகள் என்ற இனங்காணலில் ஊறிப் போயிருக்கிறார்கள்.

**ஒரு பலஸ்தீனக் கிறித்தவப் பெண்ணை யஸீர் அர.ஃ.பாத் அவர்கள் திருமணம் செய்து கொண்டுள்ளார் என்ற தகவலைப்பற்றி என்ன சொல்வீர்கள்?**

நல்லது; பலஸ்தீன விடுதலை இயக்கம் இது தொடர்பாக இன்னும் உத்தியோக பூர்வமான அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. நான் ஏற்கனவே சொன்னதுபோல பலஸ்தீனத்தில் இஸ்லாமியரா கிறித்தவரா என்ற பிரச்சினை தூக்கலாக எழாது. மேலும், ஸூஹாதாவில் மிக நெடுங்காலமாக பலஸ்தீன விடுதலையுடன் தன்னை இணைத்துக்கொண்ட அற்புதமான பெண். தன்னுடைய மிக நீண்டகாலப் போர் வாழ்க்கையில் யஸீர் அர.ஃ.பாத் இப்போதாவது காதல் வாழ்வுக்கு இடங்கொடுத்துள்ளார் என்று அனைவரும் சந்தோஷப்பட வேண்டும்.

# தவறு யார்...

உள்நாட்டு அழகிகளைக் கொண்ட ஒரு விபச்சார விடுதி, சிரேஷ்ட சிறைச்சாலை உத்தியோகத்தரின் மனைவியால் பராமரிக்கப்பட்டு வந்தது. பிரபல்யமான ஒரு சிறைக்கைதி அவரது சிறைச்சாலை உத்தியோகத்தருடன் கொழும்பில் பிரசித்திபெற்ற விபச்சார விடுதிக்கு சென்று வந்தார். இந்த சிறைக்கைதி-சிறைச்சாலை உத்தியோகத்தர்களுடன் சிறைக்கைதியின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட சந்தர்ப்பத்திலேயே மேற்படி விபச்சார விடுதிக்குச் சென்று வந்ததாக தகவல்கள் உள்ளன. இதற்கமைய கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள விபச்சார விடுதிகளோடு தொடர்புடைய தனிநபர்கள் கைதான போது உயர்மட்டங்களிலிருந்து விசேட நடவடிக்கைச் செயலணிக்கு எதிர்ப்புக் கிளம்பியது. இந்த எதிர்ப்பு ஜனாதிபதி வரை நீடித்தது. ஜனாதிபதி அவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் என்னுடன் உரையாடி உள்ளார். எனது முற்றுகைகள் காரணமாக ஜனாதிபதியின் அரசியல் ஆதரவாளர்களுக்குப் பெரும் கஷ்டம் விளைந்துள்ளது என அவர் என்னிடம் கூறினார்.

1991 ஜனவரி மாதத்தில் விசேட நடவடிக்கை செயலணி ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால் குறிப்பாக இரகசிய பொலிசார் உட்பட பொலிஸ் திணைக்களத்தின் சம்பிரதாய பூர்வமான பிரிவுகள் எமது செயலணியோடு பொறாமை கொண்டன. விசேட நடவடிக்கைச் செயலணி தமது செயற்பாடுகளை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் புலிகள் பற்றிய நடவடிக்கைகளுக்கும் மாத்திரம் வரையறுக்க வேண்டும் என்று கூறப்பட்டது. சட்ட விரோத போதை வஸ்துக்கள், விபச்சார விடுதிகள், போதைப் பொருள், கள்ளக் கடத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான முற்றுகைகளில் அது தொடர்பில் ஈடுபடக் கூடிய சாதாரண பொலிஸ் நிலையங்கள் மூலம் செய்யப்பட முடியும் என்ற கருத்தும் வெளியிடப்பட்டது.


நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல சிரேஷ்ட பதவிகளை வகிக்கும் சிலர் உட்பட சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடுவதோ அல்லது இச்சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கள்ளக்கடத்தல்காரரிடமிருந்து கொடுப்பனவுகளைப் பெறுபவர்களென்பதோ எனது முற்றுகையின் போது அம்பலமாகியது. இதன் விளைவாக விசேட நடவடிக்கைச் செயலணியின் செயற்பாடுகளுக்குத் தடையான நடவடிக்கைகளை ஆரம்பித்து விசேட நடவடிக்கைச் செயலணிக்கு எதிராக பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு இவர்கள் முயன்றனர். 1991 யூலை முகத்துவாரத்தில் கள்ளத்துணி வியாபாரம் ஒன்றை முற்றுகையிட முற்பட்ட போது விசேட நடவடிக்கைச் செயலணிக்கு எதிராக பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையமும், கிராமப் பாதுகாப்புத் துறையும் தடையாக இருந்தன.அவர்கள் விசேட நடவடிக்கைச் செயலணியின் உத்தியோகத்தர்களைக் கைது செய்யுமளவுக்கு சென்றனர்.

முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தினைச் சேர்ந்த பொலிஸ் விசேட நடவடிக்கைச் செயலணியின் உத்தியோகத்தரை கைது செய்தமை தொடர்பாக மேற்படி 3 உத்தியோகத்தர்கள் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான வழக்கினை முகத்துவாரம் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக மேற்கொண்டனர். 1991 ஓகஸ்ட் உயர்நீதிமன்றில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தாம் கடமையில் ஈடுபட்டு இருந்த போது முகத்துவாரம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் சட்டவிரோதமான முறையில் தம்மைக்கைது செய்தனர் என்று உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டது. திரு ஏ.எஸ் செ...... (பிரதி பொலிஸ் மா அதிபர்) திரு ஏ.ச.... (பொலிஸ் அதிபர் கொழும்பு) திரு ஜே.ஏ. கேமா.. (முகத்துவாரம் பொலிஸ் அதிபர்) உட்பட மேலும் சிலர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

சட்ட விரோதமான முறையில் கைது செய்யப்பட்ட தமக்கு நட்டஈடு பெற்றுத்தருமாறு விசேட நடவடிக்கைச் செயலணி உத்தியோகத்தர்கள் மூவர் கோரினர். இம் மனு பற்றிய விசாரணையின் தீர்வை வழங்குவது உயர்நீதிமன்றத்தால் பிற்போடப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் ஊழல் பேர்வழி என விசேட நடவடிக்கைச் செயலணியின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தினாலும் வேறு பல காரணங்களினாலும் விசேட நடவடிக்கைச் செயலணியை பொலிஸ் மா அதிபர் விரும்பவில்லை எனவும், தவறு செய்த பொலிஸ் உத்தியோகத்தருக்கெதிராக குற்றம் சுமத்தப்படும்போது முழு பொலிஸ் திணைக்களத்துக்கும் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் என்றவகையில் அவருடைய அங்கீகாரம் பெறாமையால் அவர் மனஸ்தாபத்தோடு இருக்கிறார் என்பதையும் நான் அறிவேன். இச்சம்பவம் காரணமாக பொலிஸ்படையில் ஒரு நெருக்கடி இருக்கின்றதென பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன. அரசாங்கத்தின் விசேடபிரிவு என்ற வகையில் விசேட நடவடிக்கை செயலணி செயற்பட முடியுமா என்ற வினாவும் தொடுக்கப்பட்டுள்ளது. இவை காரணமாகவே நான் கட்டாய லீவில் அனுப்பப்பட்டு, சேவை நீடிப்பு மறுக்கப்பட்ட நிலையில் உள்ளேன். எனது முற்றுகைகள் காரணமாக ஜனாதிபதி அவர்களுக்கும் அவரது அரசியல் ஆதரவாளர்களுக்கும், சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நான் தடையாகவும், இடர் தருபவனாகவும்இருந்து வந்துள்ளேன் என்பது எனது நம்பிக்கையாகும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் லஞ்ச ஊழலில் ஈடுபட்டுள்ளனர், என்பதையும் விசேட நடவடிக்கைச் செயலணிக்கும் ரகசிய பொலிஸ் உட்பட மரபுரீதியான பிரிவுகளுக்குமிடையே மோதல்கள் எற்பட்டதையும் எனது விசாரணைகள் அம்பலப்படுத்தின. மேற்படி காரணங்களால் நான் கட்டாயலீவில் அனுப்பப்பட்டேன் என்பது எனது நம்பிக்கையாகும்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் ஜனாதிபதி அவர்களுடைய தனிப்பட்ட ஒருமுகமான தீர்மானத்துக்கமைய நான் ஓய்வில் அனுப்பப்பட்டிருக்கிறேன். இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்வது இன்று அவருக்கு இலகுவான காரியம். ஆனால் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த ஏனைய உத்தியோகத்தர்களதும், முபபடையைச் சார்ந்த உத்தியோகத்தர்களதும் சொல்லணா அாப்பணிப்பு, தியாகங்கள் இல்லாவிட்டால் 1989-90 இருண்ட யுகத்தில் ஜே.வி.பி. பயங்கரவாதத்தை நசுக்கவோ அல்லது திரு பிரேமதாஸ அவர்கள் ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து இருப்பதற்கோ முடிந்திருக்காது. என் நடவடிக்கைகளையும், என்னால் செய்யப்பட்ட சேவைகளையும் மதிப்பீடு செய்வதற்கு ஜனாதிபதியால் முடியாமை கவலைக்குரியதாகும். நான் இந்தப் பிரகடனத்தை மிகக் கவலையுடன் ஆனால் பொறுப்புணர்ச்சியுடன் செய்கிறேன். ஜே.வி.பி. பயங்கரவாதத்தை நசுக்க அல்லது ஒடுக்க நான் செய்த சேவையை இங்கு விபரிப்பதற்கு பதில் ஜே.வி.பி. யின் உள்ளக கதையை எடுத்துரைக்கும் திரு றொகான் குணரட்ன எழுதிய "இலங்கை தோற்றுப் போன புரட்சி" என்ற நூலின் 338/241 பக்கங்களை நான் இச்சத்தியக் கடுதாசியின் இணைப்புக்களாக இணைக்கின்றேன். இச்சத்தியக் கடுதாசியை நன்கு வாசித்து அதில் உள்ளடங்கி உள்ள விடயங்களை நன்கு புரிந்து கொண்டுள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

(சட்டப் பிரச்சினைகள் காரணமாக நிறுவனங்களதும், தனிநபாகளதும் பெயர்கள் தவிர்க்கபபட்டுள்ளன.)



நன்றி - நூலகத்திட்டம்



NATIONS UNIES · UNITED NATIONS

# ஐ.நா.அவை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் இலங்கை அரசும்

— சிவாகௌதமன்

இந்த வருடம் மாசி, பங்குனி மாதங்களில் ஐக்கிய நாடுகள் அவையின் வருடாந்த மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வுகள் நிகழ்ந்தன. ஐ. நாடுகள் அவையின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை நடைமுறைப் படுத்துவதற்கும் பேணுவதற்கும் உலக நாடுகளால் அதிகாரமளிக்கப் பட்டுள்ள அமைப்பே மனித உரிமைகள் ஆணைக்குழுவாகும்.

மனித உரிமைகள் தீவிரமாக மீறப்படுவதாகக் கடுங்கண்டனத்துக் குள்ளாகிய நாடுகளில் இலங்கை, குவாட்டமாலா, பர்மா (மியன்மார்), ஈரான், இந்தோனேஷியா என்பனவும் அடங்கும்.

இலங்கை அரசைப் பிரதி நிதித்துவப் படுத்துவதற்காக ஸ்வீடனில் இலங்கைத் தூதராக இருக்கும் திரு. நெவில் ஜயவீரவும் வேறு சில அதிகாரிகளும் கலந்து கொண்டனர். அமர்வுகளின் இறுதிக் கட்டத்தின்போது திரு. பிரட்மன் வீரக்கோனும் சேர்ந்துகொண்டார்.

ஆணைக்குழுக் கூட்டத் தொடரின் ஆரம்பத்திலிருந்தே பல நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் மீறல்களை வன்மையாக எடுத்துப் பேசின. போதாக்குறைக்கு ஐ. நாடுகள் அவையினால் இலங்கையில் "காணாமல் போன வர்கள்" பற்றி உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கை வேறு தாராளமாக எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் கிடைத்திருந்தது. கனடா, ஒஸ்ட்ரியா, நெதர்லாந்து, ஆகிய நாடுகள் இலங்கை அரசுக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் தொடர் பான பிரேரணை ஒன்றைக் கொண்டுவரத் தீவிரமாக முயன்ற போதிலும் இறுதி நேரத்தில் இலங்கை அரசு கோரிக்கைகளுக்குப் பணிந்து போனமையால் இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை வாக்கெடுப் பிற்கு விடப்படவில்லை.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விதிப்பினபடி இலங்கை அரசு பின்வரும் இரண்டு கோரிக்கை களுக்கு இணங்கியுள்ளது.

ஐ.நா. அவையின் ஆணைக் குழுக்களில் ஒன்றான காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்யும் குழு (**working group on enforced and involuntary Disappearances**) வை இந்த வருடம் மறுபடியும் இலங்கைக்கு வர அனுமதிப்பது.

2. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சரியான முறையில் இலங்கை அரசினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா எனக் கண்காணிக்க அனுமதிப்பது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அடுத்த வருடக் கூட்டத் தொடரிலும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைப்பற்றியும் அவற்றைத் தடுக்க இலங்கை அரசு எடுத்த-எடுக்கவிருக்கும் அல்லது எடுத்ததாகச் சொல்லியிருக்கும் நட வடிக்கைகள் பற்றி விவாதிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ. நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் விடுத்துள்ள அறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு உள்ளது:

ஐ.நாடுகள் அவையின் அங்கத்துவநாடுகள் சார்பாகப் பின்வரும் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். இலங்கை முழுவதும் மனித உரிமைகளைப் பேணுவதற்காக இலங்கை அரசு எடுத்திருக்கும் முயற்சிகளைக் கருத்திலெடுக்கும் அதே வேளை தீவிரமான மனித உரிமைகள் மீறல் மேலும் இடம் பெறுவதையிட்டும் ஆழ்ந்த கவனம் கொண்டுள்ளது. காணாமல் போவோரின் எண்ணிக்கை குறைந்திருந்தாலும் காணாமல் போதல் தொடர்கிறது என்பதை ஐ.நாடுகள் அவையின் ஆவணங்கள் தெரிவிக்கின்றன"

"அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் என்பவற்றின் அடிப்படையில் வடக்கு-கிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இலங்கை அரசு சம்பந்தப்பட்ட அனைவருடனும் முயற்சிசெய்ய வேண்டும் என்று ஆணைக்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

"காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்யும் ஐ.நா. ஆணைக்குழு இந்த வருடம் இலங்கைக்குச் செல்ல இலங்கை அரசு உடன்பட்டமையை ஆணைக் குழு வரவேற்கிறது."

## இலங்கை அரசு சார்பில் தூதுவர் நெவில் ஜயவீர அவாகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன் ஆற்றிய உரையின் சில பகுதிகள்

உலகெங்கும் பரவலாக நிகழ்ந்து வரும் ஜனநாயம் நோக்கிய மாற்றங்களின் காரணமாக இந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு மேலும் பொறுப்புகளும் பொருத்தப்பாடும் ஏற்பட்டுள்ளன. எனவே இரண்டு உறுதியான விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, இந்த ஐ.நா. ஆணைக்குழுவுடன் இலங்கை தொடர்ந்தும் முற்று முழுதாக ஒத்துழைக்கும்.

இரண்டாவதாக, எந்தச் சூழ்நிலையில் மனித உரிமைகள் மீறல் நடந்தாலும் எமது அரசு அதனைக் கண்டிப்பதோடு அது குறித்து ஆழமாக வருந்தவும் செய்கிறது.

எமது அரசின் இந்த நிலைப்பாட்டை நான் மீண்டும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

மனித உரிமைகள் மீறலை இலங்கையில் தடுத்து நிறுத்துவதற்கு நாங்கள் பின்வரும் நடவடிககைகளை எடுத்துள்ளோம்.

சர்வதேச சமூகத்திற்காக எமது கதவுகளை நாம் திறந்து விட்டுள்ளோம். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளர் (**UNHCR**) ஐ.நா. சபை மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை (**AI**) சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய அனைத்தையும் அனுமதித் திருக்கிறோம். அனைத்து சர்வதேச பத்திரிகையாளர்களையும் தங்கு தடையின்றிப் பணிபுரிய அனுமதித்துள்ளோம்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் பரிந்துரைகள் 32இல் முப்பது பரிந் துரைகளை நடைமுறைப் படுத்துவதாக உறுதியளித்துள்ளோம். மேலும் மறுபடியும் மன்னிப்புச் சபையை இலங்கைக்கு வருமாறு அழைத்துள்ளோம்.

கேள்வி முறையற்ற கொலைகள் தொடர்பாக விசாரணை செய்யும் ஐ.நா. சபையின் சிறப்பு ஆணையாளரை இங்கு வரும்படி கேட்டுள்ளோம்.

காணாமல்போனவர்களைப் பற்றி விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளோம்.

ஒரு விஷேட மனித உரிமைகள் பணிப்படை (**Human Rights Task Force**) ஒன்றை ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் அமைத் துள்ளோம். இந்தப் படை 24 மணி நேரமும் தொழிற்படுகிறது.

கொக்கட்டிச் சோலை சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு, இக்குழு ஒரு இடைக்கால அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளது. இதன்படி பல ராணுவ உத்தியோகத்தர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்கள் ராணுவ நீதிமன்றத்தை (**Courts-Mafhal**) எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது

# கொலை செய்வதில் இலங்கை அரசுக்கு முதலிடம் - ஐ.நா.அவை

**இலங்கையில் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக இருபத்தைந்து அனைத்துலக நிறுவனங்கள் கையொப்பமிட்டு ஐ. நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன் சமர்ப்பித்த அறிக்கையின் சாராம்சத்தைக் கீழே தருகிறோம்.**

"1983 மே மாதத்திலிருந்து இலங்கை அவசரகாலநிலைச் சட்டத்தாலேயே ஆளப்பட்டு வருகிறது. ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப் பட்டும் காணாமல் போயும் உள்ளனர். மேலும் சித்திரவதை, காவலில் இருப்பவர்கள் கொலை செய்யப்படுதல், நீண்ட காலமாக எவ்வித விசாரணையுமின்றித் தடுத்து வைத்திருப்பது என்பனவெல்லாம் இலங்கையில் சாதாரணமான விஷயங்களாய்ப் போய்விட்டன.

ஐ.நாடுகள் ஆணைக்குழுவின் ஆவணம் (**E/cn.4/1992/18add**) திட்ட வட்டமாக எடுத்துச் சொல்வது என்னவென்றால் கொலைகளும் காணாமல் போனவர்களும் அதிக அளவில் உள்ள 40 உலக நாடுகளில் இலங்கையே முதலிடம் வகிக்கின்றது என்பதாகும்.

மேலும் இலங்கை அரச படையினரே பெருமளவிற்கு இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்றும் மக்கள் மத்தியில் பயவுணர்வை விதைப்பதற்காக அவர்கள் தாராளமாகக் கொலை செய்கிறார்கள் என்றும் ஐ.நா ஆணைக்குழு ஆவணம் சொல்கிறது.

இலங்கையின் மனித உரிமைகள் மீறல்களுக்கு இலங்கை அரசே பிரதானமானதும் முதன்மை யானதுமான பொறுப்பை ஏற்க வேண்டும். மனித உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் என்ற முறையில் அரசு சாராத சக்திகளின் மனித உரிமைகள் மீறலையும் நாங்கள் பூரணமாக எதிர்க்கிறோம்.

குறிப்பாகத் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணி (**JVP**)யினதும் வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் மனித உரிமைகள் மீறல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். தெற்கில் **JVP**யின் நடவடிக்கைககள் குறைந்து விட்ட போதிலும் வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டே உள்ளன. விசாரணையின்றி எழுந்த மானமான முறையில் ஆட்களைக் கொல்லுதல், ஒருவருக்கும் தெரியாத இடங்களில் வதை முகாம்களில் அப்பாவி ஆட்களைத் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்தல் என்பன இந்த மீறல்களுள் அடங்கும்.

"வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால் ஏற்படும் மனித அழிவு பற்றியும் நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இந்த யுத்தத்தினால் பல்லாயிரக் கணக்கானோர் மடிந்தும் பத்து லட்சத்திற்கு மேற்பட்டோர் அகதி களாகவும் ஆகியுள்ளனர். 1990 ஜூன் மாதத்திலிருந்து வடக்குக்கான ஒரு பொருளாதாரத் தடையையே இலங்கை அரசு நடைமுறைப் படுத்திவருகிறது. மேலும் கேள்வி முறையற்ற வகையில் வடக்கு கிழக்கு மக்கள் மீது விமானக் குண்டு வீச்சையும் இலங்கை அரசு நடத்தி வருகிறது.

"சம்பந்தப்பட்ட அனைவரையும் பேச்சு வார்த்தைகளூடாக பிரச்சி னையைத் தீர்க்குமாறும் மனித உரிமைகளை மதித்து நடக்குமாறும் இந்த ஆணைக்குழு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்த அறிக்கையில் பின்வரும் அனைத்துலக நிறுவனங்கள் ஒப்ப மிட்டுள்ளன:

1. பெண் ஒடுக்கு முறைக்கு எதிரான மூன்றாம் உலக இயக்கம் (**Third World Movement Against the Exploitation of Women**)
2. பக்ஸ் றொமானா (**Pax Romana**)
3. இணக்கப்பாட்டிற்கான சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (**International Fellowship of Reconciliation**)
4. சித்திரவதைக்கெதிரான சர்வ தேச நிறுவனம் (**SOS Torture**)
5. சமயத்திற்கும் சமாதான சர்வதேசியத்துக்குமான உலக மாநாடு (**World Conference on Religion and Peace International**)
6. இனங்களுக்கும் மக்களுக்கு மிடையே நட்பறவுக்கூட்டுக்கான சர்வதேச இயக்கம் (**International Movement for Fraternal Union Among Races and Peoples**)
7. உலகத் தொழிலாளர் கூட்ட மைப்பு (**World Confederation of Labour**)
8. மனித உரிமைகள் நியாய வாதிகள் (**Human Rights Advocates**)
9. உலகப் பல்கலைக்கழக சேவை (**World University Service**)
10. சர்வதேச மனிதாயத சங்கம் (**International Federation Terre Des Hommes**)
11. சர்வதேச மாணவா சங்கம் (**International Union of Students**)
12. சமாதானத்திற்கும் சுதந்திரத் திற்குமான உலக மகளிர் அமைப்பு (**Women's International League for Peace and Freedom**)
13. இனவாதத்திற்கு எதிரான உலக இயக்கம் (**Movement Against Racism and for Friendship Among Peoples**)
4. அமெரிக்கச் சட்டவாதிகள் சங்கம் (**American Association of Jurists**)
5. யூதப் பெண்கள் சர்வதேச சபை (**International Council of Jewish Women**)
16. மக்களின் உரிமைகளுக்கும் விடுதலைக்குமான சர்வதேச அமைப்பு (**International League for the Rights and Liberation of Peoples**)
17. அரபுச் சட்டவாதிகள் ஒன்றியம் (**Union of Arab Jurists**)
18. பக்ஸ் கிறிஸ்ரி (**Pax Christi International**)
19. ஆசியாவில் மனித உரிமைக ளுக்கான பிரதேச அமைப்பு (**Regional Council for Human Rights in Asia**)
20. ஜனநாயகச் சட்டத்தரணிகளின் சர்வதேச சங்கம் (**International Association of Democratic Lawyers**)
21. அனைத்துலக அன்னையர் இயக்கம் (**International Movement of Mothers**)
22. மூன்றாம் உலகத்துக்கான ஐரோப்பிய நிறுவனம் (**Centre Europe-Tiers Monde**)

நன்றி - நூலகத்திட்டம்



## பிரம்மாவினுள்ளும் செல்வா

ஆசிரியருக்கு!

பிரம்மாவின் கட்டுரை படித்தேன். அண்ணாவும், கலைஞரும், தந்தை செல்வாவும் கட்டி வளர்த்த தமிழ்ப் பண்பாட்டை இயக்கங்கள் தோன்றி சீரழித்துவிட்டன. இருந்தாலும் என்னைப் போன்ற ஒரு சிலரின் நெஞ்சில் தந்தை செல்வா வீற்றிருப்பது போல பிரம்மாவினுள்ளும் தந்தை செல்வா அழியாது வீற்றிருக்கிறார் என அறிந்தபோது புளகாங்கிதம் அடைந்தேன்.

தந்தை செல்வாவின் வழியில் பணி தொடரும் கூட்டணியினரை - அவர்கள் ஏதாவது சிறு தவறுகள் இழைத்திருந்தாலும் கூட இவ்வாறு தாக்கி எழுதியிருப்பதைத் தவிர்த்திருக்க வேண்டும். பிரம்மா இந்த இடத்தில் பிசகியிருக்கத் தேவையில்லை.

அதே போல் இந்தியா தமிழர் பிரச்சினையைத் தீர்க்க எவ்வளவு உதவியுள்ளது என்பதையும் பிரம்மா மறக்கக்கூடாது.

ப. சொர்ணலிங்கம்
கொழும்பு-12


## ஷெல்லடி வேண்டாம்.

ஆசிரியருக்கு !

வாசகர்கள் சரிநிகருக்கு வழங்கும் கருத்துக்களை சொ(ஷெ)ல்லடி என்ற பதத்தினை உபயோகித்து கொச்சைப்படுத்துவது அருவருப்பான செயல் என்று நான் நினைக்கிறேன்.

தனிப்பட்ட தொண்டமான் யார்? பிரேமதாச யார்? என்று மக்கள் புரியாதிருந்த காலம் மலையேறி விட்டது. சும்மா தொணடமானையும் அவர் கட்சியையும் திட்டுவதால் ஆவதொன்றுமில்லை. தொண்டமான் முன்வைக்கும் தீர்வு, முன்னைய தீர்வுகளை விட எவ்வாறு வேறு படுகிறது. இது தொடர்பான அரசின் அபிப்பிராயம் என்ன என்பதனையும் பார்ப்பதே சிறந்தது.

மலையகம் பற்றி மற்றைய பத்திரிகைகள் வழங்காத செய்தி களை வழங்கியுள்ளீர்கள். இதழ் 13,14ல் வந்தது போன்று தொடர்ந்து எழுதுங்கள். இதழ் 14ல் "பாரம்பரிய




தாயகப்பிரச்சினையும் முஸ்லிம்களும்" என்ற யு.எம். நிஸாரின் கட்டுரை த்மிழ்-முஸ்லிம் ஐக்கியத்திற்கும் சுயநிர்ணய உரிமைப் போருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இதெல்லாம் புலிக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு. முதலில் புலிக்கு அறுவைச் சிகிச்சை செய்து காதினைக் கூர்மையாக்க வேண்டும். இதே வேளை இருக்கிற காதையும் செவிடாக்குகிறார்கள் விடுதலை காண வெளிக்கிட்ட தலை முறையினர்.

மேற்கு நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளைப் பற்றிய விபரங்கள், பெறும் முறைகளை உங்கள் பத்திரிகையில் வெளியிட்டால் என்ன?

மெல்லத் தமிழினி சில வேளை களில் அந்தக் காலத்தில் வெளியான சிரித்திரனுக்கான ஆக்கங்களைத் தாண்டி வருகிறது. அன்ன பூரணாவின் தேசிய விடுதலைப் போராட்டம்- ஒரு மீளாய்வை நோக்கி.... ஒரு மீட்டலைத் தருகிறது. பிரம்மாவினையும் நழுவ விட வேண்டாம்.

சில வேளைகளில் உங்கள் பத்திரிகையைப் பார்த்தால் புலி பொறுப்பெடுத்திருக்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறது. இதழ் 13ல் மாவீரரின் பிரசுரத்தைப் பிரசுரித்த உங்களின் தந்திரங்களை மக்களால் விளங்க முடியாது.

வாசகர் கடிதங்கள் கேள்விகளாக வரும்போது பிரசுரித்து விட்டு பதில் எழுதாமல் மௌனம் சாதிப்பது ஏன்?

முக்கியமானது; யுத்த தளபாடங்களைப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாம். எமது பாதுகாப்புக்கு அது ஊறுவிளைவிக்கும் ஏவுகணைகளாக மாறிவிடும்.

உதயன்
கண்டி.

## பிரம்மோபதேசம் யாருக்கு?

ஆசிரியருக்கு!

கடந்த சில இதழ்களில் பிரம்மா என்பவர் எழுதிவரும் கட்டுரைகளை நான் விரும்பிப் படித்து வருகிறேன். சுருக்கமாக நிறையத் தகவல்களை கொண்டதாக அவர் எழுதிய கட்டுரைகள் எல்லாமே எனக்குப் பிடித்தன. ஆனால் கடந்த மாத இதழில் அவர் எழுதியகட்டுரையை வாசித்தபோது எனக்கு எரிச்சல்தான் வந்தது. அக்கட்டுரையின் கடைசிப்பந்தியில் அவர் பெரியாரும், அண்ணாவும், தந்தை செல்வாவும் கட்டி வளர்த்த தமிழ்த்தேசிய பண்பாடும், உரிமைப்போரும், இந்தியாவினால் அழிக்கப் படுவதற்கான சதி நடப்பதாக எழுதியிருப்பதைத் தான் நான் குறிப்பிடுகிறேன்.

பெரியாரையும், அண்ணா வையும், செல்வநாயகத்தையும் ஒரேதட்டில் வைத்து எப்படி அவரால் பார்க்க முடிகிறது என்று எனக்குப் புரியவில்லை. தனது கொள்கைக்காக இறுதிவரை இலட்சியப் பிடிப்புடன் வாழ்ந்து பெரியார் எங்கே? அரசியல் நாடகம் ஆடி பதவி மோகத்திற்காக இலட்சியத்தை விற்றுப் பிழைத்த அண்ணா எங்கே? தடைச்சட்டம் போட்டதும் திராவிட நாட்டை கைவிட்ட அண்ணாத்துரையும் பெரியாரும் எப்படி அவருக்கு ஒன்றாகப் போனார்கள்? தமிழ் அரசியலினை உலக நாடுகளதும், குறிப்பாக இந்தியாவினதும் விளையாட்டுப் பொருள்களாக்கிய பெருமையைத் தட்டிக்கொண்ட செல்வநாயகம் தந்தையாக கௌரவிக்கப்பட்டது கோவை மகேசன் போன்றோருக்கு பெருமை தரலாம் பிரம்மாவுக்குமா அப்படி?

சாதாரண எல்லா அரசியல் வாதிகளையும் போலவே அவரும் வாழ்ந்தார்; பிழைப்பு நடத்தினார்; மறைந்து போனார். வரலாற்றில் அவருக்கு ஒரு பாத்திரம் உண்டுதான். ஆனால் பிரம்மா சொல்லும் தந்தைப்பாத்திரம் அல்ல. அவர் வளர்த்த தேசிய பண்பாடுதான் அரசியல் விரோதிகளை சுட்டுத் தள்ளுவித்தது. அதுதான் இன்று நாயைவிட கேவலமாக்கி வைத்துள்ளது தமிழனை. தந்தைக்கு பிறகு அண்ணன்! அண்ணனுக்குப் பிறகு தம்பி, இந்தத் தொடர்ச்சிதான் எமது தேசியப்பண்பாடு என்றால் அது இந்தியச் சதியால் என்றால் என்ன? இடி விழுந்தென்றால் என்ன அழிந்து போகட்டும்.

பிரம்மாவின் பிரம்மோபதேசம் இந்த விடயத்தில் யாரை ஏமாற்றுவதற்கு?

இன்றைய கூட்டணியைத் தாக்கும் பிரம்மா அதை இப்படி வளர்த்துவிட்ட தந்தையை பாராட்டுவது வியப்புத்தான்.

ஒரு குறளை அவருக்கு சமர்ப்பிக்கிறேன்

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாலறியப்படும்"

க.கணபதி
கொழும்பு-06

# தமிழர்களை ஏமாற்றியதாலேயே யுத்தம் தொடர்கிறது !

-பலப்பிட்டிய ஸ்ரீ சித்தார்த்த தேரோ



**கேள்வி- பௌத்த பிக்குமார் பலர் யுத்தத்தைத் தீர்வாகக் குறிப்பிடு கின்றனர். இது பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

பதில்- பௌத்த பிக்குமார் இன வாதத்தையோ, சாதிவேறுபாட்டையோ ஏற்கமாட்டார்கள். எமது இனம், எமது சாதி என்று ஒன்றிருக்க முடியாது. சித்தார்த்தர் சாக்கிய வம்சத்தில் பிறந்தாலும் நீரைப் பகிர்ந்து கொள்வ தற்கான யுத்தத்தின் போது புத்தபகவான் ஒரு பக்கத்தையும் சாராமல் நடந்து கொண்டார். எங்களுடைய பௌத்த பிக்குமாருக்கு இது ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

**கேள்வி- நடைமுறை யுத்த தர்மம் யுத்தத்துக்கு எதிரானது அல்ல எனச் சிலர் கூறுகின்றனர். அது பற்றித் தங்களது கருத்து என்ன?**

பதில்- நடைமுறை யுத்த தர்மம் என்று ஒன்றும் இல்லை. இது வர்த்தக ரீதியில் உருவாக்கிக் கொண்ட ஒன்றாகும்.

**கேள்வி- யுத்தம் இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்து, இவ்வளவு உயிர்களைப் பலி எடுப்பதற்குக் காரணம் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில்- இந்த நாட்டை ஆட்சி செய்த ஆளும் கட்சிகளும், ஏனைய அரசியற் தலைவர்களும் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவும், அதனை வென்றெடுப்பதற்காகவும் வாக்குகளைப் பெறுவதற்காகவும், வடக்கில் வாழும். மக்களை ஏமாற்றியதன் விளைவாகவே யுத்தம் உருவாகி உள்ளது. வடக்கில் வாழும் தமிழ்மக்கள் சுதந்திரத்தைப் பெற்றவுடன் ஒரு தனிப் பிராந்தியத்தைக் கோரவில்ல. சில உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர்கள் சிற்சில ஆர்ப்பாட்டங்களை செய்தனர். எம் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை ஏமாற்றியதன் பயனாகவே இந்நிலை வளர்ச்சியடைந்தது.

இந்தப் பேரழிவுக்கான அண்மித்த காரணம் 1956ம் ஆண்டு ஆட்சியுகத்தில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் என நான் கருதுகிறேன். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அன்றைய தலைவர்கள் சிங்கள் மொழி மாத்திரம் என்ற கொள்கையை பின்பற்றினர். அதற்குத் தீர்வாகப் பின்னர் கையெழுத்திடப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இந்த சூழலில் தமிழ் மக்கள் சத்தியாக்கிரகம் செய்தனர். இவ்வாறாக அவர்களுடைய உரிமைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்காத படியால் அவற்றைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்து ஆட்சி பீடம் ஏறியோர் உரிய தீர்வை முன் வைக்காததால் இந்நிலைமை ஏற்பட்டது.

**கேள்வி- மனிதப் படுகொலை களுக்குத் தீர்வாக தங்களிடம் உத்தேச திட்டமோ அல்லது யோசனைகளோ உண்டா?**

பதில்- சுருங்கக் கூறின் இதற்கு அரசியற் தீர்வு அவசியம். தனிப்பட்ட முறையில் நான் நாடு துண்டாடப்படுவதை எதிர்க்கிறேன்

ஜனநாயக ரீதியில் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். பல ஆண்டுகள் புரையோடி யிருக்கும் புண்ணை திடீரென குணமாக்க முடியும் என்று கருதமுடியாது. அதற்கு ஒரு காலம் தேவை. இதற்கு சிங்கள தமிழ் மக்கள் சில அர்ப்பணிப்புக்களையும், விட்டுக்கொடுப்புக் களையும் செய்தல் வேண்டும்.

இறுதியாக நான் கூறுவது அரசியல் தீர்வுக்காக அதிகாரப் பகிர்வு அவசியம் என்பதே ஆகும்.

## மண்டூர்...

சொல்லப்பட்டது. ஆயினும் பத்திரிகையாளர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குள் அகப்படும் சமயத்தில் எப்படி வெட்டுக் காயங்கள் ஏற்படும் எனக் கேட்டிருந்தனர். (ஐலண்ட் மே1) அதற்கு அரசு தரப்பில் சொல்லப்பட்ட பதில் 'இது பற்றி விசாரிக்க வேண்டும்' என்பதாகும்.

கொல்லப்பட்டவர்களின் விபரம் வருமாறு-

| | |
|---|---|
| 1. தம்பிமுத்து சுப்பையா | - கணவன் |
| 2. பொன்னம்பலம் கருணையம்மா | - மனைவி |
| 3. சுப்பையா கோபாலன் | - மகன் |
| 4. சுப்பையா சரோஜா | - மகள் |
| 5. சுப்பையா சசிகலா | - மகள் |
| 6. சுப்பையா ராசநாயகம் | - மகன் |
| 7. சுப்பையா நீலா | - குழந்தை |
| 8. செல்வி வடிவேல் | - அயல் வீட்டைச் சேர்ந்தவர். |

## புலிப்படைக்கு ....

"அரசியலில் நிரந்தர நண்பர்களோ நிரந்தரப் பகைவர்களோ கிடையாது; நிரந்தர நலன்கள் மட்டுமே உண்டு" என்று அரசியல் சாணக்கியர்கள் கூறுவர். புலிகளைத் தடைசெய்த துடன் இந்திய அரசு புலிகளை ஒரேயடியாகக் கைவிட்டு விட்டது என்று யாராவது நினைத்தால் அது தவறு! அரசியலில் குறுகிய காலம், நீண்டகாலம் என்று இரண்டு வகை உள்ளதை நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். மறுபுறத்தில் புலிகளைத் தவிர்த்துவிட்டு அல்லது தடைசெய்து விட்டு தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று நினைப்பது யதார்த்தமல்ல. விரும்பியோ விரும்பா மலோ விடுதலைப் புலிகள் இன்று வடக்குக் கிழக்கில் ஒரு மறை முகமான அரசென்றும் அவர்களை முற்றுமுழுதாக ராணுவ ரீதியில் வெல்வது சாத்தியமில்லை என்றும் அரசியல் அவதானிகளில் ஒரு சாரார் வலியுறுத்தியுள்ளார்கள். புலிகள் மீதான தடை தமிழ்நாட்டில், ஏற்கெனவே அதிருப்தியும், விரக்தியு முற்றுள்ள திராவிடர் இயக்கப் போக்கை மேலும் வன்முறைக்குத் தூண்டுவதாகவே அமையப் போகிறது. டாக்டர் செல்வி. ஜெ.யின் திராவிடர் இயக்க எதிர்ப்பும், பிராம ணியச் சார்பும், அமைப்பு ரீதியில் பலம் வாய்ந்த ஆனால் தீவிரத் தலைமை யற்றிருக்கிற தி.மு.க; தி.க. போன்ற அமைப்புக்களைத் தமிழ்த் தீவிர வாதத்தின் பால் ஈர்க்கும் என்று தமிழ்நாட்டு அரசியல் அவதானிகள் கூறியிருக்கிறார்கள்.

எனவே பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் வரிசையில் தமிழ்நாடும் இடம் பிடித்து விடுமா?

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## ஏன் தடை .......

**என்று கருதுகிறீர்களா?**

பதில்: உண்மையில் புலிகள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வில்லை. எனவே புலிகள் மீதான இந்தியாவின் தடையானது தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.

**கேள்வி: வட-கிழக்கு இணைப் பையே இலங்கை அரசோ பிரதான சிங்களக் கட்சிகளோ மறுக்கும் நிலையில் தெரிவுக் குழுவினதும், இப்பிரச்சினையினதும் அடுத்த கட்டம் என்னவாயிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

**பதில்: வட-கிழக்கு இணைப்புத் தொடர்பாக எல்லாத் தமிழ்க் கட்சி களும் ஒரு பொது உடன்பாட்டிற்கு வந்துள்ளன. முஸ்லிம் கட்சிகளுடனும் ஒரு புரிதல் ஏற்பட்டிருக்கிறது. எனவே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து தெரிவுக் குழுவில் இதனை வலியுறுத்துவோம். இதனையும் மீறி வட-கிழக்கு இணைப்பு ஏற்றுக் கொள்ளப்படா தவிடத்து தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதில் எதுவித பிரயோச னமுமிருக்காது. அதன் பிறகு நாம் என்ன நடவடிக்கைகளில் ஈடுபடு வோம் என்று உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை.**

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இல 6 அலோசாலை கொழும்பு 3 தொலைபேசி - 574047

## மண்டூர் படுகொலை

புத்தாண்டின் மறுநாள் மண்டூரில் நடைபெற்ற புலிகளின் தாக்குதல் ஒன்றின்போது ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த கேதாரன் (21), சீனித்தம்பி வேலுப்பிள்ளை (25) ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இக்கொலைக்குப் பழிவாங்கும் நோக்குடன் ரெலோ இயக்கத்தினர் ஒரே குடும்பத்தினரைச் சேர்ந்த ஏழு பேரையும் மறுநாள் பரீட்சைக்குச் செல்லவிருந்த அயல் வீட்டைச் சேர்ந்த செல்வி வடிவேல் என்பவரையும் கொன்று போட்டுள்ளனர் என்ற தகவல் சரிநிகருக்குக் கிடைத்துள்ளது.

இதுபற்றிய பத்திரிகையாளர் விசாரணையின் போது இக்கொலைகள் இருபகுதியினருக்குமிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையின் போது இடையில் அகப்பட்டதால் ஏற்பட்ட மரணம் என்று

பக்கம் 11 இல்

# அழிஞ்சிப்பொத்தான அழிப்பு !


(வாழைச்சேனையிலிருந்து நமது நிருபர்)

மட்டக்களப்பு-பொலனறுவை எல்லைப் புறத்தில் வெலிக்கந்தை இராணுவ முகாமிற்கு ஆறுமைல் தொலைவில் அமைந்துள்ள முஸ்லீம் குடியேற்றக் கிராமமான அழிஞ்சிப் பொத்தானையில் 29ம் திகதி அதிகாலை இருள் விலகாத நிசப்தமான வேளையில் துப்பாக்கிகளுடனும் வாள்களுடனும் நுழைந்த நூற்றுக்கு மேற்பட்ட ஆயுத பாணிகளால் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட 54 முஸ்லீம் பொதுமக்கள் கொலை செய்யப் பட்டார்கள். 57 பேர் வெட்டிப் படுகாயப்படுத்தப்பட்டார்கள்.

இந்த மனித நேயமற்ற படுகொலைகள் நடந்த அழிஞ்சிப் பொத்தானை முஸ்லீம் கிராமமானது இலங்கை அரசினால் திட்டமிடப்பட்டு தொடரும் சிங்கள குடியேற்றக் கிராமங்களுக்கு ஒரு பாதுகாப்பு வலயத்தை போல் உருவாக்கப்பட்ட பல கிராமங்களில் ஒன்றாகும்.

சிங்கள குடியேற்றப் பிரதேசங்களுக்குப் பாதுகாப்பாக சிங்கள குடியேற்றக் கிராமங்களுக்கு சற்று தொலைவில் இவ்வகையான சில முஸ்லீம் குடியேற்றக் கிராமங்களை அரசு தன்நலம் கருதி உருவாக்கி வருகிறது. பொலநறுவை மட்டக்களப்பு எல்லைப்புறங்களில் மட்டும் இவ்வகையான 25க்கு மேற்பட்ட முஸ்லீம் குடியேற்றக் கிராமங்களை அரசு உருவாக்கியுள்ளது.

இக்கிராமத்தின் பாதுகாப்பு கருதி ஏற்கனவே ஒரு தற்காலிக இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. அது பின்னர் நீக்கப்பட்டு ஒரு பொலிஸ்



நிலையமும் ஊர்காவல் படையும் நிறுவப்பட்டன. 50க்கு மேற்பட்ட முஸ்லீம் ஊர்காவல் படையினரும் 26 பொலிசாரும் இவ்வூரின் காவல் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். புலிகளால் இக்கிராமம் தாக்கப்படும் போது எந்தவித எதிர்த் தாக்குதல்களோ அல்லது துப்பாக்கி வேட்டுக்களோ இடம் பெறவில்லை. அப்பாவி முஸ்லீம் பொது மக்கள் மட்டுமே வெட்டிக் கொல்லப் பட்டுள்ளனர்.

புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இந்த இரண்டு மணிநேரத்தில் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த 26 பொலிசாரும் 50க்கு மேற்பட்ட ஊர்காவல் படையினரும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? ஏன் இவர்களை மட்டும் புலிகள் வெட்டவில்லை? சுடவுமில்லை? பொலிசாரும் ஊர்காவல் படையினரும் எந்த இழப்புமின்றி எப்படி உயிர் பிழைத்துக் கொண்டார்கள்? இந்தக் கேள்விகளுக்கு இன்னும் விடை தெரியாது.



ஆனால் இந்தப் படுகொலைகளைப் பினனியபடி ஒரு 'மர்மம்' இருக்கிறதென்று தெரிகிறது. இங்கு கடமையிலீடுபட்ட பொலிசார், ஊர்காவல் படையினர் மீது விசாரணை நடத்தப்படபோவதாக முப்படைத் தலைமையகப் பேச்சாளார் கேர்ணல் முனசிங்க அறிவித்துள்ளார் அழிஞ்சிப் பொத்தானை படுகொலை நடந்துமுடிந்து சிலமணி நேரத்தில் முப்படைத்தலைமையக தளபதிகள் சகிதம் விரைந்து சென்ற அமைச்சர்கள் குழு அனுதாபத்தை தெரிவித்து நிலைமைகளை நேரில் அவதானித்து கொல்லப் பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை பொலநறுவை அரசாங்க அதிபர் மூலம் உடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தனர்.

கொல்லப்பட்டவர்களுக்கு ரூபா 2000/-வீதம் பணமும் கொலையுண்டவர்களின் உடல்களைச் சுத்தம் செய்ய பவுசர்கள் மூலம் தண்ணீரும் வெள்ளைக் கொடியும் இன்னும் பிறவும் வழங்கப்பட்டன.

அமைச்சர்கள் அவ்விடத்தை விட்டகன்ற சில மணி நேரங்களின் பின்னர் அன்று பகல் தமிழ்க்கிராமங்களான முத்துக்கல், ,கரப்பொல । ஆகிய இடங்களில் வசித்து வந்த அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் மீது மீண்டுமோர் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

முத்துக்கல் கிராமமானது பொலநறுவை மாவட்டத்திலிருந்து இருபத்திரெண்டு மைல்களுக்கு அப்பாலுள்ளது. இது அடர்ந்த காடுகளும் மலைகளும் சூழ்ந்த விவசாயக் கிராமமாகும். இக் கிராமத்தவர்களுக்கும் நகருக்குமான தொடர்புகள் மிகவும் குறைவு. மிகவும் பின்தங்கிய ஒரு கிராமம் இது.

அழிஞ்சிப்பொத்தானையில் என்ன நடந்தது என்பதைக் கூட சரியாக அறிந்து கொள்ளாத இம்மக்களை சுற்றிவளைத்த கொலைகாரர்கள் கத்தியால் வெட்டியும் கோடாரியால் மனித உடல்களை துண்டாடியும் பழிக்குப்பழி தீர்த்துக் கொண்டார்கள். மூன்று குடும்பத்தை சேர்ந்த 17 பேர் ஒரு வீட்டினுள் போட்டு வெட்டியும் கொத்தியும் கொல்லப்பட்டார்கள். எல்லாமாக 58 பேர் கொல்லப்பட்டும் 75க்கு மேற்பட்டோர் உடல்கள் பிளக்கபபட்டு காயப்படுத்தப் பட்டுமுள்ளனர் 16 பெண்கள் தாக்குதல் நடத்தியவர்களால் கடத்திச்செல்லபபட்டு சில பெண்கள் கற்பழிக்கப்பட்டு, அவர்களின் மார்பகங்கள் அறுக்கப்பட்டு காட்டுமரங்களில் தொங்க விடப்பட்டன. ஏனையோருக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை.

அழிஞ்சிப்பொத்தானையில் நடந்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கதுருவெலை நகரில் கடைகளைப்பூட்டி துக்கம் தெரிவித்த முஸ்லீம்கள் குழு ஒன்றே தேவையானோரின் உதவியுடன் லொறிகளில் சென்று தாக்குதல் நடத்தியதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

இக்கிராமங்கள் தாக்கப் படுவதற்கு முன்னரே கதுருவெல நகருக்குள் இக்கிராமங்கள் தாக்கப்படப் போகின்றன என்ற செய்தி பரவிவிட்டது.

கதுருவெல நகரிலிருந்து ஆயுதங்களுடன் சென்ற இக்கொலைகாரர்களையும் இவ்வாயுதங்களையும் இடையில் இருந்த பாதுகாப்பு படைகளின் தடைமுகாம்கள் எப்படி அனுமதித்தன என்பது மிக முக்கியமான கேள்வி.

வாழைச்சேனையில் காகித நகரிலும் 5 மாணவிகள் 4 சிறுவர்கள் உட்பட 16 பேர் காவத்தைமுனை முஸ்லீம் ஊர்காவல் படையினரால் கடத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டுக் காணமல் போயுள்ளனர்.

காகித நகரில் காவத்தைமுனை முஸ்லீம் ஊர்காவல் படையினரால் கடத்தப்பட்டவர்களில் வெடடுக் காயங்களுடன் தப்பிய ஒரு சிறுவர் வாழைச்சேனை மேஜர் விக்கிரமசிங்கவிடம் தன்னுடைய முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இன்னமும் இப்பிரதேசங்கள் பதட்டத்துடன் தான் முக்கி முனங்கிக் கொண்டிருக்கின்றன. முத்துக்கல் கிராமம் ஒன்றரை வருடங்களுக்கு முன்னரும் ஒரு தடவை தாக்கப்பட்டிருந்தது.



## கனடாவில் புத்தகக் கண்காட்சி

கனடாவில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் நகரங்களில் மிகவிரைவில் நடைபெறவிருக்கும் புத்தகக் கண்காட்சிக்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன சேகரிக்கப்படுகின்றன. அனுப்ப விரும்பும் வெளியீட்டாளர்கள் கீழுள்ள முகவரிக்கு தங்களது வெளியீடுகளை அனுப்பி வைக்கலாம். இயலுமான வரை அனைத்துப் பிரதிகளையும் அனுப்புதல் விரும்பத்தக்கது.

Social Reserch circle
1477 Eglington Ave West H 3
Toronto, ON T
M6E 2G6
CANADA

## செய்ய வேண்டிய.

**மக்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்குப் பாதகமானதல்ல என்று கருதுகிறீர்களா?**

பதில்: இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா இதனைத் தெளிவாகக் கூறியுள்ளார். தமிழ் மக்களது பிரச்சினைக்கான அரசியல் தீர்வு வேறு, புலிகளைத் தடைசெய்வதென்பது வேறு என்று, இலங்கை அரசுடன் பேசி இணக்கத் தீர்வொன்றிற்கு வர முடியும் என நாம் கருதுகிறோம். அதற்குப் புலிகள் தடையாக உள்ளனர். இதே போல மக்களது நலன்களைப் பேணுதல், ஜனநாயக உரிமைகளை வழங்குதல் என்பதற்கும் புலிகள் தடையாக உள்ளனர்.

**கேள்வி: வட-கிழக்கு இணைப்பையே இலங்கை அரசோ பிரதான சிங்களக் கட்சிகளோ மறுக்கும் நிலையில் தெரிவுக் குழுவினதும், இப்பிரச்சினையினதும் அடுத்த கட்டம் என்னவாயிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

பதில்: தெரிவுக் குழு பற்றிய எனது அபிப்பிராயம் வேறு. அதை இப்போது கூறி நான் குழப்பிவிட விரும்பவில்லை. ஆனால் வட-கிழக்கு இணைப்பைப் பொறுத்தவரை அது தமிழ் மக்களின் ஒரு அரசியல் அலகு. ஜனாதிபதி அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எல்லாத் தமிழ்க் கட்சிகளும் இவ்விடயத்தில் இறுக்கமாக இருப்பதால் இதில் பிரச்சினை வர வாய்ப்பில்லை.

## நெருக்குதலின் .....

ஊறு விளைவிப்பதாக தெரிவித்தே புலிகளை இந்தியா தடை செய்துள்ளது. ஆனால் புலிகள் இந்தியாவின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் எந் நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

தொடர்ச்சியான புலிகள் மீதான தடை தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் இந்தியா மேற்கொண்டுவரும் நெருக்குதலையே வெளிக்காட்டுகிறது. எனவே, இந் நெருக்குதலின் ஒரு தொடர்ச்சியாகவே இத் தடையும் விளங்குகிறது எனவும் அவ்வறிக்கையில் புலிகள் தெரிவித்துள்ளனர்.